விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 05 செவ்வாய்க்கிழமை (18.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

# ஜனாதிபதி சொன்னால் காணிகள் விடுவிக்கப்படும்

## படையினர் தடையல்ல என இரா. சம்பந்தர் தெரிவிப்பு



(கொழும்பு)

பாதுகாப்பு படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை என தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், ஜனாதிபதி தெரிவிக்கும் பட்சத்தில் காணிகளை விடுவிப்பதற்கு படையினர் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(23-ம் பக்கம்...)

## குப்பைமேடு அனர்த்தம் 30பேர் பலி

(கொழும்பு)

கொலன்னவா மீதொடமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று பிற்பகல் வரை 30 ஆக அதிகரித்து 24☛

## வைகோ மறியல் நீடிப்பு

(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமியின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள் 23☛

## அளவுக்கு அதிகமாக மது அருந்தியதால் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெற்றுவரும் நிலையில் அளவுக்கதிகமாக மது அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் நேற்றைய தினம் சிகிச்சை பலனின்றி யாழ் போதனா வைத்திய 22☛

## 137 ஆண்டுக்குபின் அதிகளவு வெப்பம்

(வாஷிங்டன்)

தற்போது இந்தியா மற்றும் இலங்கை உட்பட அனைத்து நாடுகளிலும் அதிகளவிலான வெப்பநிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில், கடந்த 137 ஆண்டுகளிலேயே அதிக வெப்பம் நிலவிய இரண்டாவது மாதமாக மார்ச் மாதம் காணப்படுகின்றது.

நாடுகளின் 6 ஆயிரத்து 300 பாக 22☛

## மோடி – சம்பந்தன் விரைவில் பேச்சு!

(கொழும்பு)

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான் உத்தியோகபூர்வ சந்திப்பு எதிர்வரும் மே மாதம் 12-ம்திகதி நடைபெறவுள்ளது. 22☛

## ஐ.நா தீர்மானத்தில் அரசு அசமந்தம்!

(கொழும்பு)

இலங்கை அரசு அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுவதால் ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அசமந்தப்போக்கில் செயற்படுகின்றது என தெரிவித்த நல்லிணக்க கலந்தாலோசனைச் செயலணியின் செயலர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, தீர்மானம் நிறைவேற்ற முன்னரும் இவ்வாறான நிலையே தொடர்ந்தது. 22☛

## நயினாதீவில் ஜனாதிபதி வழிபாடு



(யாழ்ப்பாணம்)

யாழுக்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது குடும்பத்தினர் சகிதம் நயினாதீவு நாகவிகாரை மற்றும் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்துக்கு 23☛

## நாட்டைப் பிரிக்காது தமிழருக்கு அதிகாரம்

### நளின் எம்.பி நம்பிக்கை

(கொழும்பு)

நாட்டைப் பிரிக்காமல் தமிழர்களுக்கு நிச்சயம் அதிகாரப் பகிர்வு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கொழும்பு 22☛

## புலிகளுடனான போர் இந்தியாவினுடையது!

### ராஜீவ் கொலைக்காக - மகிந்த



(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போர் நடவடிக்கை இந்தியாவுக்காகவே நடத்தப்பட்டிருகின்றது. இந்தப் போருக்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் இந்தியா உதவியது என முன்னாள் ஜனாதிபதி 23☛

## அம்பாந்தோட்டையில் சீன கடற்படைத்தளம்!

### இந்தியா எச்சரிக்கை

(புதுடில்லி)

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்பாடு கையெழுத்திடப்பட்டால், அங்கு சீன கடற்படைத் தளமும், சீன விமானப்படைத் தளமும் அமைக்கப்படுவது உண்மையாகி விடும் என்று இந்தியாவின் முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அருண்குமார் சிங் எச்சரிக்கை செய்துள்ளார்.

சீனாவின் காசோலைப் புத்தக இராஜதந்திரம் என்ற தலைப்பில் டெக்கான் குரோனிக்கல் 23☛

## சக்திமிக்க இலங்கை

### வியட்நாம் பிரதமர் புகழாரம்



(ஹனொவில்)

இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்து 22☛

## சர்வதேச ஆய்வரங்கு யாழ்.பல்கலையில்

(யாழ்ப்பாணம்)

சவால்களுக்கு மேலான நிலைத்திருப்புக்கான உறுதிப்பாட்டை தூண்டுதல் எனும் தலைப்பிலான சர்வதேச ஆய்வரங்கு நான்காவது தடவையாக எதிர்வரும் யூலை மாதம் 25, 26 ஆம் திகதிகளில் பல்கலையின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்து ள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணிய 04☛

## பலியானோருக்கு ரூபாய் ஓர் இலட்சம் நட்டஈடு – அரசு

(கொழும்பு)

மீதொட்டமுல்ல அனர்த்தத்தில் உயிரிழந்த மற்றும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு நட்டஈடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு தலா ஓர் இலட்சம் ரூபாய் வரை நட்டஈடாக [illegible]

### எதிர்வரும் 21,22,23-ம் திகதிகளில்

## யாழ் பல்கலைக் கழகத்தில் அனைத்துலக சைவ மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்தும் இரண்டாவது அனைத்துலகச் சைவமாநாடு எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை [illegible]ளதாக யாழ். 04☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் உள்ள MD 90
மோட்டார் சைக்கிள் உடன்
விற்பனைக்கு உண்டு.
(8133)
0769176049, 0765456551



## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

### கலைமாமணி

### Dr.S.S.சர்மா குருஜீ

077 784 1558

(C-8126)


# நவீன தொடருந்து தொகுதி கொள்வனவு

(கொழும்பு)

இந்திய மதிப்பில் ரூபாய் 680 கோடி பெறுமதியான நவீன தொடருந்து இயந்திரங்கள் மற்றும் தொடருந்து தொகுதிகளை இந்தியாவிடம் இருந்து இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது.

இந்திய தொடருந்து துறையின் துணை நிறுவனங்களில் ஒன்றான ரயில் இந்தியா தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சேவை நிறுவனத்திடமே இந்தக் கொள்வனவுக்கான கட்டளையை இலங்கை அரசாங்கம வழங்கியுள்ளது.

இந்த தொடருந்துகள் மற்றும் இயந்திரங்கள் வாரணாசியிலும் சென்னையிலும் நவீன உள்ளூர் தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்படவுள்ளன.

2011ஆம் ஆண்டு இலங்கைக்கு இந்தியா வழங்கிய கடன் திட்டத்துக்கு அமைய இந்த கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்த தொடருந்து தொகுதிகள் விநியோகிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## அஞ்சலி செலுத்துகிறோம்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி சுதர்சினி கமலேஸ்வரனின்
அன்புத் தாயார்

### திருமதி
### இராசபூரணம் கந்தையா



அவர்கள் அமரத்துவம் அடைந்தமை
அறிந்து அன்னாரது ஆத்ம சாந்தி
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/நல்லூர் தெற்கு.**
**ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயக்**
**குடும்பம்**

(8750)

## மரண அறிவித்தல்

திருமதி
### தங்கம்மா முத்துக்கிருஷ்ணன்



பொலிகண்டி, ஆழக்கிணற்றடி, மாணிக்க பவனத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா முத்துக்கிருஷ்ணன் 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - செல்லம்மாவின் அன்பு மகளும் அமரர் முத்துக்கிருஷ்ணனின் அன்பு மனைவியும் சரோஜாதேவி, தெய்வநாயகி (சுவிஸ்), கதிர்காமலிங்கம் (அதிபர் - குடத்தனை அ.மி.த.பா), பத்மலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் செல்வக் கதிரமலை, திருமதி பரராஜசிங்கம், செல்வமலர் ஆகியோரின் அன்புச் சிறிய தாயாரும் அமரர் செல்லையா, அமரர் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி, அமரர் இராசா, அமரர்களான தம்பிராசா, சின்னத்துரை, செல்லாச்சி, சோபனம், பாக்கியம், கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயக்கொடி (சுவிஸ்), விஜயசிறி, தேவரஞ்சினி (ஆசிரியர் - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), வெண்ணிலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குந்தவி, வைஷ்ணவி, பிரேந்திரா, விஜேந்திரா, சஜேந்திரா, அட்சயா, நிகில், துபீசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் அமரர் இராசா, நாகமுத்து, பன்னிருகரம், நல்லையா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2017) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாணிக்க பவனம்.
ஆழக்கிணற்றடி.
பொலிகண்டி.

(8752)

தகவல்:
குடும்பத்தினர்


## PREM
Electrical & Construction Pvt Ltd.

## பணிநிலை வேண்டுகை

### மின்னிணைப்பு
அடிப்படைத் தகைமைகள்:
- சாதாரண தரம்
- 3 Phase வயறிங்

### நீர்க்குழாய் பொருத்துனர்
அடிப்படைத் தகைமைகள்:
- சாதாரண தரம்

### வயறிங், நீர்க்குழாய் பொருத்துனர்
### AC helper and Fitter
அடிப்படைத் தகைமைகள்:
- சாதாரண தரம்
- வயறிங், நீர்க்குழாய் பொருத்துதல்
- A/C தெரிந்தவர்கள்

நேர்முகத் தேர்வு : 20.04.2017
நேரம் : மு.ப 11.30
இடம் : கோப்பாய் மத்தி, கோப்பாய்.
(NSB மேல்மாடி)

கிளிநொச்சியை சேர்ந்தவர்களுக்கும் கட்டாரில் பணிபுரிந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு: 077 804 8143

(8756)


## மரண அறிவித்தல்

திருமதி
### கிறிஸ்ரபெல் கிறாசியா றொபின்சன்



யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரபெல் கிறாசியா (அருந்ததி, குட்டி) 10.04.2017 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் யோசவ் - மாகிறேற் தம்பதியரின் இளைய மகளும் றொபின்சனின் அன்பு மனைவியும் சோபிதாவின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - சந்திரலேனா தம்பதியரின் மருமகளும் சாந்தி, ஆனந்தி, சுகந்தி (பிரான்ஸ்), சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்றூ (பிரான்ஸ்), றெனோ (லண்டன்), ஜெனி (லண்டன்), ஜெசி (லண்டன்), கொண்சி, பெனோஜினி, பொனோஜன் (பிரான்ஸ்), இளங்கோ (பிரான்ஸ்), கவிதா (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் லூயிஸ், மனோராஜ், அமலதாசன் தவம் (பிரான்ஸ்), நிக்சன் (ஆசீர் வணிக நிலையம்), அனிற்றா, றஜீவ் (லண்டன்), நியூட்டன் (பிரான்ஸ்), அனுசியா, மில்ரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரெபனி, ஷலோமிதா, பிறேமிதா, பவியான், பவியோலா ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.04.2017) புதன்கிழமை Eglise Saint - Bruno Grenoble தேவாலயத்தில் 3.45 P.M திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு Saint Roch, Cemetery சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

TP NO
021 222 0038 (யாழ்ப்பாணம்)
0033148303823 (பிரான்ஸ்)

(8748)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரல்

## அரசு சார்பில் அமைச்சர் சாகல

(கொழும்பு)

**கொழும்பு - மீதோட்டமுல்ல பிரதேசத்தில் குப்பை மேடு சரிந்து ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடம் அரசாங்கம் பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளது எனவும் அனர்த்தத்தின் போது இடம்பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**



மாத்தறை - தெவிநுவர ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சமய நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெற்ற விபத்துக்காக அரசாங்கம் என்ற வகையில் அந்த மக்களிடம் நாங்கள் மன்னிப்பு கேட்கின்றோம்.

இந்த விபத்து இடம்பெறுவதற்கு முன்னர் மாற்று இடத்தை அடையாளம்கண்டிருந்தோம். இடமாற்றம் செய்வதற்கும் முடிவெடுத்திருந்தோம். எனினும் அப்பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அதுமட்டுமன்றி மதத் தலைவர்களும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

சில இடங்களில் நாங்கள் நீதிமன்ற உத்தரவையும் பெற்றோம்.

குப்பை பிரச்சினையானது அனைத்து நாடுகளிலும் நிலவுகிறது.

நாங்கள் அதற்கு தீர்வுகளைத் தேடி கொண்டுவர முயற்சிக்கின் றோம்.

அனர்த்தத்திற்கு முகங்கொடுத்திருக்கும் மக்களின் உயிரைப் பாதுகாப்பதே எமது முதற்கட்ட கடமையாகுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒவ்வொரு பிரஜையும் ரூ.4 இலட்சம் கடன்

### அமைச்சர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டின் ஒவ் வொரு பிரஜையும் சுமார் 4 இலட்சம் ரூபாய் கடன் பட்டுள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

திஸ்ஸமஹாராமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட மக்களின் பிரதான பிரச்சினை வீடில்லாமையே என தெரிவித்த அமைச்சர் சஜித் பிரேமதாஸ அதனை நிவர்த்தி செய்ய கடந்த ஆட்சியாளர்களால் முடியாமல் போனதாக தெரிவித்தார். (இ-7)

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை பிள்ளையானின் விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட 4 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## பெற்றோரைக் கொடுமைப்படுத்திய ராணுவத்தினர் இரண்டு பேர் கைது

(கொழும்பு)

தமது தந்தை மற்றும் தாயை கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டில் இரு ராணுவச்சிப்பாய்கள்கொபேய்கனே பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தந்தையை மரத்தில் கட்டி வைத்ததோடு, தாயை தாக்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள், பனாகொட தொழில்நுட்ப பயிற்சி கல்லூரி பிரிவில் கடமையாற்றும் சகோதரர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சர்வதேச ரீதியில் அவமானப்பட்டுள்ள இலங்கை அரசு

(கொழும்பு)

இலங்கையின் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் குற்றம் சுமத்தும் வகையில் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மீதோட்டமுல்ல குப்பை மேடு சரிந்தமை தொடர்பில் பல முக்கிய சர்வதேச ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளது.

அவற்றின் பல செய்திகளில் முறைசாரா கழிவு முகாமைத்துவம் காரணமாக இலங்கை ஒரு அசுத்தமான நாடு என குறிப்பிடப்பட்டுள்ளது.

கழிவுகள் மறுசுழற்சி மேற்கொள்ளப்படாமல் உள்ளமை தொடர்பில் ஆச்சரியமடைவதாக அந்த செய்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும் இலங்கையை ஏளனம் செய்யும் வகையில் சர்வதேச ஊடகங்கள் பல்வேறு செய்திகளை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில், கழிவு முகாமைத்துவம் இல்லாமையினால் பல்வேறு நோய்கள் ஏற்பட கூடும் என்பதனால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவது தொடர்பில் பல அழுத்தங்கள் ஏற்படக்கூடும் என துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

## மீதோட்டமுல்ல குப்பை கொட்ட உகந்த இடமல்ல

(மீதோட்டமுல்ல)

மீதோட்டமுல்ல தற்காலிகமாகவேனும் குப்பையை கொட்டுவதற்கு உகந்த இடமல்ல எனவும் இது தொடர்பில் உரிய திணைக்களங்களுக்கு ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பெரதெனியா பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் ஏ.கே. கருணாரட்ன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த விடயம் தொடர்பில் மத்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார். (இ-7)

## மீதோட்டமுல்ல குப்பைமேடு சரிவினால் பாதிப்படைந்த மக்களுக்கு நேற்று அஞ்சலி





(கொழும்பு)

மீதோட்டமுல்ல குப்பை மேடு ச்ரிவினால் பாதிப்படைந்த மக்களுக்கு நுவரெலியா டயகம மேற்கு 5ஆம் பிரிவு தோட்ட மக்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் அனுதாபங்களை தெரிவித்து அஞ்சலி செலுத்தினர்.

குப்பைமேடு சரிவில் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி, விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தி ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தினர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச ஆய்வரங்கு ...

ளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர்மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது ஒவ்வொரு வருடமும் சமகால முகாமைத்துவத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி மகாநாட்டினை தொடர்ந்து நான்கு வருடங்களாக நடத்தி வருகின்றது 2017 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஆய்வு மாநாடானது எதிர்வரும் ஆடி மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. சர்வதேச ஆய்வாளர்களின் ஆய்வு கட்டுரைகளை வெளிப்படுத்துவதற்கான தளமாக இந்த மகாநாடு அமைகின்றது.

பல்வேறு பட்ட சவால்களை சமாளித்து நிலைத்திருப்பதற்கான தந்திரோபாயங்களை வெளிக்கொணர்ந்து 'எமது பிரதேசத்தின் வியாபார வளர்ச்சியின் ஊடாகப் பொருளாதார எழுச்சிக்கான அடித்தளத்தை சமகால முகாமைத்துவம் மீதான இந்த சர்வதேச ஆய்வு மாநாடானது வழங்குகின்றது.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தால் நடத்தப்படும் இவ்வாய்வு மகாநாடு கல்வியியலாளர்களுடைய அறிவு பரிமாற்றத்தையும் இணைப்பினையும் உருவாக்குகின்றது.

இது கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கும் வளங்களை பகிர்வதற்கும், வாதங்களில் பங்குபற்றுவதோடு உலகிலுள்ள பல்வேறுபட்ட நபர்களிடையே நட்பை உருவாக்குவதற்கும் உதவுகின்றது. இது மிகவும் புதிய முகாமைத்துவ ஆய்வு முறைகளை அறிந்து கொண்டு பல்வேறு நாடுகளிலுள்ள வியாபார கலாசார ஒழுக்க விதிகளை பகிர்வதற்கும் அதனூடாக நிறுவன வளர்ச்சிக்கும் உதவுகின்றது.

சவால்களை சமாளித்தல் என்பது இன்றைய நடைமுறைச் சூழலில் மிகவும் சிக்கலான கருமமாகும்.

பல்வகைப்பட்ட ஆய்வு முறைகளின் ஊடாக வியாபார சமூகத்திற்கு ஆதரவளிப்பது சவால்களுக்கு மேலான நிலைத்திருப்பிற்கான உறுதிப்படுத்தலாகவே இருக்கும் என இந்த ஆய்வு மாநாடு கருதுகின்றது.

இந்த சமகால முகாமைத்துவ ஆய்வரங்கு சவால்களுக்கு மேலான நிலைத்திருப்பதற்கான உறுதிப்பாட்டை தூண்டுதல் என்ற தொனிப்பொருளை மையமாக கொண்டுள்ளது.

இவ் ஆய்வரங்கிற்கான ஆய்வுக்கட்டுரைகளை பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

கணக்கீடும் நிதியும், வங்கியியலும் காப்புறுதியும், வணிகமும் சட்ட சூழலும், வணிக தகவல் முறைமையும் வடிவமைப்பும், முயற்சியாண்மை அபிவிருத்தி, கலாசாரமும் ஒழுக்கவியலும், பொருளாதாரமும் சமூக கொள்கைகளும், செயற்திட்ட முகாமைத்துவமும் புத்தாக்கமும், ஆரோக்கிய முகாமைத்துவம், மனிதவள நிறுவன நடத்தையும், சர்வதேச வியாபாரமும் நிதியும், அறிவு முகாமைத்துவம், நகர முகாமைத்துவம், சந்தைபடுத்தல் விநியோக சங்கிலி முகாமைத்துவமும்,

ஆய்வு முறையியல் மீதான முன்னுதாரண மாற்றங்கள், மாவட்ட மற்றும் மாகாணமட்ட சவால்கள், பிராந்திய சமூக திட்டங்கள், தந்திரோபாய முகாமைத்துவம், சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கான தந்திரோபாயங்கள், சுற்றுலாத்துறை விருந்தோம்பல் மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஆய்வுச் சுருக்கத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கும் முன்னர் சமர்ப்பிக்கலாம். ஆய்வு சுருக்க ஏற்பறிவிப்பு எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரையும்; ஆய்வு கட்டுரை கையளிப்பு எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதி அன்றும். ஆய்வு கட்டுரை ஏற்பறிவிப்பு எதிர்வரும் யூன் மாதம் 1ஆம் திகதி ஆகும்.

மேலதிக விபரங்களை iccmuoj@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும், htt://con.jaf.ac.lk/iccm/ என்ற இணையத்தளம் மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும். மேலும் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி 0212223610, 0777448358 இணைப்பாளர் கலாநிதி திருமதி ச.சண்முகதாஸ் 0772622371 ஆகியோரது தொலைபேசி ஊடாக தொடர்பு கொள்ளவும் முடியும் எனவும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இதன் போது மேற்படி இணையத்தளத்தை துணைவேந்தர் உத்தியோக பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த சந்திப்பில் வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ - 4)

## யாழ்.பல்கலைக்கழக ...

பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்துள்ளார். பல்கலையில் நேற்றைய தினம் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனும் மகுட வாசகத்தைக் கருப்பொருளாகக் கொண்டு விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள கற்கை நெறிகளுள் அதியுயர் புலமைத்துவ மையம் எனும் சிறப்புமிகு பெருமிதத்துடன், 1974ம் ஆண்டு முதல் இந்துநாகரிகத்துறை சிறப்புடன் இயங்கி வருகின்றது. இக்கற்கை நெறியுடன் இணைந்ததாக இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) எனும் சிறப்புக் கற்கை நெறியும் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றது.

சென்ற ஆண்டு இத்துறையினர் முதலாவது அனைத்துலகச் சைவமாநாட்டினை 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம், 13ஆம், 14ஆம் திகதிகளில் சிறப்புடன் கைலாசபதி கலையரங்கில் பலரும் பாராட்டத்தக்க விதத்தில் நிகழ்த்தியிருந்தனர்.

இவ்வாண்டும் இத்துறையினர் நடத்தும் இரண்டாவது அனைத்துலகச் சைவமாநாடானது கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் 3 நாட்களாக திருவருட் சிறப்புடன் நடைபெறவுள்ளது. இச் சைவமாநாட்டின் கருப்பொருள் "சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும்" என்பதாகும்.

இவ்வாய்வு மாநாட்டிற்கு நூற்றிமுப்பத்தொரு ஆய்வுக் கட்டுரைகள் சைவசித்தாந்த மேன்மைகள் பற்றியும், இலங்கையரின் சைவசித்தாந்தப் பங்களிப்புப் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தம் நான்கு சமகால அமர்வுகளில் இருபத்திநான்கு அரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன.

இதன் மூலம் இலங்கையில் சைவசித்தாந்த சிந்தனைகள் மென் மேலும் வளர்த்தெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையில் சைவசித்தாந்தத்திற்குரிய இடத்தினை மதிப்பிடவும் இம்மாநாடு வழிவகுக்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெருமையை உலகிற்கு வெளிப்படுத்துவதாகவும் இம்மாநாடு நிச்சயம் உதவும். இவ்வாய்வுமாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மட்டுமன்றி தென்கிழக்கு, கிழக்கு, பேராதனை, சப்பிரகமுவ ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆய்வாளர்களும், மாணவர்களும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர்களும், மாணவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்தியாவிலிருந்தும் பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் இம்மாநாட்டில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவர்களது ஆய்வுக்கட்டுரைகள் மாநாட்டின் தொடக்க நாளன்று "ஆய்வடங்கல்" ஆக வெளியிடப்படவுள்ளது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவ்வாய் வடங்கலில் மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகளும் இடம்பெறுவது இரண்டாவது அனைத்துலக சைவமாநாட்டின் குறிப்பிடத்தக்க சிறப்பான அம்சமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து

(23ஆம் பக்கம் பார்க்க)


**வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்**
**மருதனார்மடம், சுன்னாகம்.**

**சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்**

வலிகாமம் கல்வி வலயத்துக்கான சிற்றுண்டிச்சாலையினை 11 / 05 / 2017 ஆம் திகதி முதல் 10 / 05 / 2018 ஆம் திகதி வரை நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம், மருதனார்மடம், சுன்னாகம்" என்னும் முகவரிக்கு 30 / 04 / 2017 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்வி அறிவித்தல்" எனக் குறிப்பிடவும்.

குறிப்பு :-

இது தொடர்பான படிவங்களையும், மேலதிக விபரங்களையும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்குப் பகுதியில் 19/04/2017 ஆம் திகதி முதல் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

பி.செல்வின் இறேனியஸ்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.
17/04/2017

(C-8128)



## பிறந்தநாள் நினைவுகள்



**செல்வி**
**வல்லிபுரநாதன்**
**பிறிந்தாஜினி**
**(பிறிந்தா)**

**மலர்வு : 18 / 04 / 1985**
**உதிர்வு : 02 / 01 / 2009**

**ஞாலப் பெருவெளியில் நாமினிதாய் நடக்கையிலே**
**காலச் சகதியினில் உனைக் கைநழுவ விட்டோமம்மா.**
**வானக் குடைநிழலில் நாம் வகையாக வாழ்கையிலே**
**ஈனச் செயலெங்கள் இருதயத்தை அறுத்ததம்மா**
**பிறிந்தா!**
**வனப்புடை மலரே எம் மனம்நிறை மகளே!**
**தினந்தினம் உன் நினைவுகள் தீயை நெஞ்சில் மூட்டுதம்மா**
**ஆறாத்துயர் தந்து எம் அகத்துறையும் மலர்வனமே - நாம்**
**வாழும் காலமெல்லாம் நீளுமம்மா உன் நினைவு**

**குடும்பத்தினர்**
**மட்டுவில் நாடு மேற்கு.**
**பூநகரி.**

(C - 8131)



## மரண அறிவித்தல்

## கந்தையா சிவபாதசுந்தரம்



*வரணி வடக்கு வரணியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவபாதசுந்தரம் அவர்கள் 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் எய்தியுள்ளார்.*

*அன்னார் காலஞ்சென்ற கந்தையா-செல்லம்மா அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி-வள்ளியம்மை அவர்களின் பாசமிகு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், சிறிதரன், சிவறஞ்சினி (ஜேர்மனி), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்பழகன் (ஜேர்மனி), ரகுநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர் சுப்பிரமணியம், சிவப்பிரகாசம் (மிருசுவில்), கெங்காதேவி (வரணி), அம்பலவாணப்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் வேலுப்பிள்ளை மற்றும் நடராசா, அமரர் பூரணபாக்கியம், சிவசோதிமலர் (ஆசிரியை-கிளி/கண்டாவளை ம.வி), அமரர் சிவானந்தராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், அனுசுயன், அனோஜன், அஜந்தன், அஸ்மிதன், அக்ஷயன், அஸ்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (18.04.2017) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்டாவளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**பிரதான வீதி,**
**கண்டாவளை.**

(சி-8132)

**தகவல்:-**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை அனுமதிப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

03. பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 18.04.2017 தொடக்கம் 08.05.2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதியை 09.05.2017 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விபரத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் 09.05.2017 ஆம் திகதியன்று பி.ப 2.00 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 26.04.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டுதொகை மில்லியனில்(Vat, தார் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | திண்மக்கழிவு பரிகரிப்பு நிலையம் அமைத்தல் | 2.58 | 03 மாதம் | C8 | 26,000.00 |
| 2 | ஸ்ரீலங்கா வீதி புனரமைப்பு | 1.75 | 03 மாதம் | C8 | 18,000.00 |
| 3 | இராமநாதன் 6ஆம் வீதி புனரமைப்பு | 0.92 | 03 மாதம் | C8 | 10,000.00 |
| 4 | குருந்தடி வீதி புனரமைப்பு | 1.60 | 03 மாதம் | C8 | 16,000.00 |
| 5 | குஜாம்புலம் வீதி புனரமைப்பு | 1.07 | 03 மாதம் | C8 | 10,000.00 |
| 6 | ஆரவாரப்புல வீதி புனரமைப்பு | 1.04 | 03 மாதம் | C8 | 10,000.00 |
| 7 | தாமோதரம்பிள்ளை வீதி புனரமைப்பு | 1.46 | 03 மாதம் | C8 | 15,000.00 |
| 8 | விலாங்கன் கலட்டி வீதி புனரமைப்பு | 2.70 | 03 மாதம் | C8 | 27,000.00 |

தி.சுதர்சன்
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம்.

(C-8125)

## யாழ். மாநகர சபை

### பகிரங்க ஏலம் - பெரியகடை மரக்கறிச் சந்தை

யாழ். மாநகர சபையின் ஆளுகையின் கீழுள்ள பெரிய கடை மரக்கறி சந்தையை 2017 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம்.

இடம் : நானாவித இறைவரிப்பகுதி, யாழ்.மாநகர சபை.
காலம் : 25.04.2017 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணி

ஆரம்ப கேள்வித் தொகை : ரூ.9,85,129.41
(வரி நீங்கலாக)

குத்தகைக்காலம் : 01.05.2017 - 31.12.2017 வரை

தேவையான விபரத்தை அலுவலக நேரத்தில் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

சி-8124

திரு பொ.வாகீசன்,
ஆணையாளர்,
யாழ்.மாநகர சபை.

18.04.2017

## தெளிவாகத் தெரியும் உலக முடிவிடம்!



(கொழும்பு)

நுவரேலியாவில் தற்போது நிலவும் வசந்தகாலம் காரணமாக பெருமளவான சுற்றுலாப் பயணிகள் அங்கு படையெடுத்துள்ளனர்.

புத்தாண்டு மற்றும் நீண்ட விடுமுறை காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் அங்கு சென்றுள்ளனர்.

நுவரேலியாவில் இருந்து 22 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹோட்டன் சமவெளி தேசியப் பூங்காவில் பெருமளவு சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

இந்நாட்களில் ஒஹிய மற்றும் பட்டிபொல நுழைவாயிலுக்கு அருகில் நீண்ட வாகன வரிசை ஏற்பட்டுள்ளது.

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக உலகமுடிவினை தெளிவாக பார்க்கக் கூடியதாக அங்கு சென்றுள்ள சுற்றுலாப் பயணிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)



## இராசி பலன்

18.04.2017
(சித்திரை 05, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி முன்னிரவு 11.45 மணிவரை
பூராடம் முன்னிரவு 7.30 மணிவரை
சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகினி, மிருகசீரிடம்<br>இரவு 2.06 மணிக்கு<br>மகர-சந் | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** தேக நலனில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**மிதுனம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை ஏற்படும்.

**கடகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவ செலவுகள் குறையும், உறவினர்களின் வருகையால் உற்சாகம் பெருகும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபல்யமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சிறப்பான நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உடன்பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** நல்ல காரியத்துக்கு பிள்ளையார் சுழிபோடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பாராத காரியம் ஒன்று நடைபெற லாம், சிந்தனை மிகுதியான நாள், கூட்டாளிகளின் ஒத்து ழைப்பு கிடைக்கும்.

**மகரம்:** இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், பயணத்தால் பலனுண்டு, தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தூர தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், எதிர்பார்த்த தனவரவு வந்து சேரலாம்.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல் லம் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தக்வல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா சித்திரை வருடப் பிறப்பு அன்று நடைபெற்றது.

## போதைப்பொருள் விழிப்பூட்டல்



உலகதரிசன நிறுவனத்தின் அனுசரணையில் தென்மராட்சி வலய அழகியல் பிரிவினரால் நாடக ஆற்றுகை அண்மையில் இடம்பெற்றது. வரணி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார். இனியதை செய்வோம் என்ற தலைப்பில். நாடக ஆற்றுகை இடம்பெற்றதைத் தொடர்ந்து. போதைப்பொருள் பாவனை மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து எமது எதிர்காலத்தை காப்போம் என்ற வகையில் பார்வையாளர்களால் கருத்துக்கள் பகிரப்பட்டன. இதன்மூலம் போதைப் பொருள்பாவனைக்கு எதிராக மக்களிடமிருந்த கருத்துக்கள் மனந்திறந்து பகிரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மாகாணக் கண்காட்சி இன்று

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணக் கண்காட்சி இன்றும் (பிற்பகல்-2 மணிமுதல் மாலை 6 மணிவரை) நாளையும் (முற்பகல் 10 மணிமுதல் மாலை 4 மணி வரை) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும். வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தலைமையில் இடம்பெறும் இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் பாராளுமன்ற மாகாண சபை உறுப்பினர்கள், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிபம் கிராம அபிவிருத்தி வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி.வி.சண்முகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் இரண்டாம் நாள் நிகழ் வான நாளை புதன்கிழமை கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளதுடன் பல் கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## புதிய இடத்தில் பாடசாலை



மணற்காடு றோ.க.த.க பாடசாலை எதிர்வரும் 25.04. 2017 இல் இருந்து புதிய இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 74 வருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தேவாலயத்திற்கு அருகாமையில் இயங்கி வந்தது. சுனாமி ஆழிப் பேரலை ஏற்பட்டதன் பின்னர் கரையோரமாக இருந்த வீடுகள் அழிவடைந்தது. இதனைத் தொடர்ந்து ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு பாடசாலைக்கு காணியும் ஒதுக்கப்பட்டது.

அக்காணியில் புலம்பெயர் அமைப்பினரால் மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டதுடன் வடக்கு மாகாண சபையினால் கட்டடம் ஒன்றும் அமைக்கப் பட்டது. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 25.04.2017 திகதியில் இருந்து மணற்காடு றோ.க.த.க. பாடசாலை புதிய இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-60)






உடுவில் மகளிர் கல்லூரியின் வீதிப் போக்குவரத்துப் பிரிவிற்கு டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியால் ஒரு தொகுதி பொருட்கள் அதிபர் பற்றீசியா சுனித்தா ஜெபரட்ணத்திடம் கையளிக்கப்படுவதையும் பொறுப்பாசிரியர் அருள்ரமேஸ், மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.



நல்லூர் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட சூழலை சுத்தமாக வைத்திருக்கும் செயற்றிட்ட ஒன்றுகூடல் அண்மையில் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையில்

# வடக்கு அபிவிருத்தி குறித்து இன்று ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று 18ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையில் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் இடம்பெறும்.

குறித்த கூட்டத்தில் வடக்கில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள பல திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்புதல் மற்றும் அது தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளுடன் அதற்கான நிதியீட்டல்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

குறித்த கூட்டத்தில் வடக்கின் பல பாரிய திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. குறிப்பாக ஆறுமுகம் திட்டம், மாங்குளத்திற்கான பரங்கிய குடிநீர்த் திட்டம் என்பவற்றுடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மர முந்திரிகை திட்டம் ஆகியவற்றுடன் குருநகர் [illegible] தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இவற்றுடன் வட மாகாணத்திற்கு கிடைக்கவுள்ள ஆயிரம் மில்லியன் ரூபாவிற்கான வணிக வளாகத்தை அமைத்தல், ஐம்பது மில்லியன் ரூபா செலவில் இரணைமடுக் குளக்கட்டில் அமைக்க எண்ணியுள்ள பூங்கா அனுமதி போன்ற விடயங்களும் ஆராயப்படவுள்ளன.

இவ்வாறு ஆராயப்பட்டு அனுமதிக்கப்படும் பட்சத்தில் குறித்த திட்டங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட்டு நன்மையீட்டும்நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த அபிவிருத்தி கூட்டத்தில் வடக்கு மாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-4)

## மணலகழ அனுமதி மறுப்பு மக்களுக்கு பாரிய சிரமம்

யாழ். மாவட்டத்தில் மணல் அகழ்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் பொதுமக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்வதில் பாரிய சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் மணல் தேவையினை பூர்த்தி செய்வதற்கு மருதங்கேணி குடாரப்பு பகுதி நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில் மேற்கு ஆகிய பகுதிகளில் மணல் அகழப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியில் இருந்து குறித்த பிரதேசம் "இயற்கை ஒதுக்கமாக பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

அதன் காரணமாக புவிச்சரிதவியல் சுரங்கப்பணியகத்தால் குறித்த பகுதியில் மணல் அகழும் பணி.கடந்த இரண்டு வாரங்களாக முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மக்களின் வீட்டுத்திட்ட தேவைகளை பூர்த்தி செய்வதில் பாரிய சிரமத்தினை அதிகாரிகள் எதிர் நோக்கியுள்ளதுடன் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மீள் குடியேறியுள்ள மக்ககளுக்கான வீட்டுத்திட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது மீள் குடியேற்ற அமைச்சு மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் பொதுமக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு வீடு கட்டும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றான மணல் தேவையைப் பூர்த்தி செய்வதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

## கூட்டமைப்பில் போட்டியிடுமாறு கஜேந்திரகுமாருக்கு அழைப்பு



தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காக தேர்தல் பிரசாரத்தை செய்யாமல் விட்டதற்குப் பரிகாரம் தேடும் வகையில் பொதுத் தேர்தலில் அனைவரும் வாக்களியுங்கள் என்று முதலமைச்சர் விடுத்த அறிக்கை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மேலும் வில்லங்கத்தைக் கொடுத்தது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தேர்தலில் வெல்ல வைப்பதற்காகவே அப்படியொரு அறிக்கையை விக்னேஸ்வரன் விட்டிருந்தார் என்ற பிரசாரம்




கூட்டமைப்பால் செய்யப்பட்டதாயினும் இரா.சம்பந்தர் அவர்கள் அதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

வீடு என்ற சொற்பதம் அடிக்கடி பயன்படுத்தக்கூடிய ஒரு சொல். அதேபோன்று வாக்குகள் என்று வந்தவுடன் பொன்னான வாக்குகள் என்று கூறுவது வழமை.

இதனை அகடவிகடமாகப் பொருட்படுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் கூறிவிட அது, முதலமைச்சருக்கு அட்டமத்தானாக பிடித்துக் கொண்டது.

வீட்டிற்கு வெளியே வந்து உங்கள் பொன்னான வாக்குகளை அளியுங்கள் என்று முதலமைச்சர் விடுத்த அறிக்கை ஒருபோதும் உள்நோக்கம் கொண்டதாக இருக்காதென்பது தெளிவு.

எனினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்குக் கட்டுப்படுகிறார் இல்லை என்றவுடன் அவருக்கு நெருக்கடியைக் கொடுக்க நினைத்தவர்கள் அமைத்த இந்த வியூகம் உரியவர்களுக்கு வெற்றியைக் கொடுத்ததெனலாம்.

இதற்குக் காரணம் 2015 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கனதியான வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வெற்றிக்காகப் பாடுபட்டனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அமோக வெற்றி பெறக் கூடிய வாய்ப்பு உண்டென்ற கருத்து கூட்டமைப்பிற்குள் இருந்துதான் எழுந்தது.

இஃது தேர்தலின்போது ஏற்பட்டதல்ல. தேர்தலுக்கு முன்னரே அப்படியொரு நினைப்பு கூட்டமைப்பில் இருந்ததனால்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றொரு அழைப்பை எம்.ஏ.சுமந்திரன் விடுத்திருந்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பில் இணைந்து தேர்தலில் போட்டியிடச் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் தனது வெற்றியும் உறுதியாகிவிடும் என்பது சுமந்திரனின் கருத்தாக இருந்திருக்கலாம்.

அதாவது, கூட்டமைப்புடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு கஜேந்திரகுமார் சம்மதம் தெரிவிப்பாராயின் வடமராட்சி மக்களின் வாக்குகளை சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் தங்கள் இருவருக்குமாக ஆக்கிக்கொள்வர்.

இது தேசியப்பட்டியல் எம்.பி. என்ற பதவிப் பெயரை களைய வேண்டும் என முடிவெடுத்த சுமந்திரனுக்குச் சாதகமாக இருந்திருக்கும். எனினும் சுமந்திரனின் அழைப்பை கஜேந்திரகுமார் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலைமை தேர்தல் வெற்றிக்காக சுமந்திரனை கடுமையாக பாடுபட வைத்தது. அதாவது எம்.ஏ.சுமந்திரன் அவர்களின் பாராளுமன்ற பிரவேசம் தேசியப்பட்டியல் ஊடாக ஏற்பட்டது. தனது அரசியல் பணிக்கு சுமந்திரனின் பங்களிப்பு தேவை என்பது இரா.சம்பந்தரின் முடிவு. இதனால் அவரை தேசியப்பட்டியல் எம்.பியாக சம்பந்தர் நியமித்தார்.

அடுத்த பொதுத் தேர்தலிலும் சுமந்திரனுக்கு தேசியப்பட்டியல் மூலம் எம்.பிப் பதவி கிடைப்பது உறுதியாகவே இருந்தது.

ஆனால் தேசியப் பட்டியல் எம்.பிப் பதவி என்பது மனத்தளவில் ஒரு சோர்வைத் தரக் கூடியது.

அதேநேரம் ஏதாவது கருத்தை அடித்துக் கூறுவதாக இருந்தால் அதற்கு தேசியப் பட்டியல் என்பது இடைஞ்சலாக அமைந்தது.

அதாவது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருக்கு பாராளுமன்றத்தில் உரிய கௌரவம் இருந்தாலும் சொந்தக் கட்சிக்குள் இருக்கக் கூடிய கௌரவம் குறைவு என்றே சொல்ல வேண்டும்.

நாங்கள் மக்களின் வாக்குகளை நேரடியாகப் பெற்று வந்தவர்கள். நாங்கள் பெற்ற வாக்குகளின் அதீதத்தால் வந்தவர்கள் தான் தேசியப் பட்டியல் எம்.பிக்கள்.

எனவே அவர்களுடைய கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை இல்லை என்ற கர்வம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்தது.

இந்நிலைமையை நேரடியாக அனுபவித்த சுமந்திரன் தேர்தல் களத்தில் குதிப்பதென முடிவு செய்தார்.

தனது முடிவை அவர் தனது ஆதரவாளர்களிடம் கூறிய போது தொடர்ந்தும் நீங்கள் தேசியப் பட்டியல் எம்.பியாக இருப்பது நல்லது என்ற கருத்தை சிலர் தெரிவித்ததாகவும் தகவல் உண்டு.

எதுவாயினும் சுமந்திரனின் பங்களிப்பு சம்பந்தருக்குத் தேவையாக இருந்தமையால் தேர்தலில் சுமந்திரன் தோல்வி அடைகின்ற சூழ்நிலை ஏற்பட்டாலும் தேசியப் பட்டியல் மூலம் அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆவது உறுதி.

ஆக, ஒன்றில் இது அல்லது அது என்ற சாதகமான நிலைமை சுமந்திரனுக்கு தைரியத்தைக் கொடுக்க, அவர் தேர்தல் களத்தில் குதித்தார்.

தேர்தல் களத்தில் இறங்கிய சுமந்திரன் தனது வெற்றிக்காக பல வியூகங்களை அமைத்தார். அதில் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பை தனக்குப் பக்கபலமாக ஆக்கிக் கொண்டார்.

இது ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வெற்றி தொடர்பில், கூட்டமைப்பை விட அகில இலங்கை தமிழ்க் காங்கிரசுக்கு அதிகூடிய ஆசனங்கள் கிடைக்கும் என்ற எதிர்வுகூறல் பரந்து பிடித்தது.

இஃது கூட்டமைப்பிற்கு நாகாஸ்திரமாக அமைய அவர்கள் தமது தேர்தல் பிரசாரங்களை மாற்றியமைத்து கஜேந்திரகுமார் தரப்பை தாக்க தலைப்பட்டனர்.

அதேநேரம் கஜேந்திரகுமாரின் ஆதரவாளர்களில் அநேகர் இளைஞர்களாக இருந்ததன் காரணமாக அவர்களின் தேர்தல் பிரசாரம் முகநூல் உள்ளிட்ட சமூக வலைத் தளங்களினூடாக மேற்கொள்ளப்பட்டது. சமூக வலைத்தளங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களுக்கு இளைஞர்களே கருத்துரைத்தனர்.

தவிர, புலம்பெயர் தமிழ் உறவுகள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென விரும்பினராயினும் அந்த விருப்பம் நிறைவேற வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களின் பிரசாரம் தாய் மண்ணுக்கு வந்து சேராமல் புலம்பெயர்ந்த நாடுகளிலேயே நடந்து முடிந்தது. இவைதான் கஜேந்திரகுமாரின் கட்சி ஆசனங்களைப் பெற முடியாமல் போனமைக்கு காரணம் எனலாம்.

*வளரும்*

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தினுடைய ஊழியர் விடுதிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று இடம்பெற்றது. விடுதிக்கான அடிக்கல்லை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாட்டி வைத்தார்.
(படங்கள்: பொ.சோபிகர்)

# காணிகள் கையளிப்பு தொடர்பான கூட்டங்கள்

## அடுத்த வாரம் நடைபெறும்

யுத்தத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் அரச படையினரால் கையகப்ப டுத்தப்பட்டுள்ள பொதுமக் களின் காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிப்பது தொடர்பாக மாவட்ட செயலகங்களில் எதிர்வரும் வாரம் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

வடக்கில் நடைபெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் அரச படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் நிலங்களை அவர்களிடம் கையளிப்பது தொடர்பாக நேற்றுக் காலை விசேட கலந்துரையாடல் ஒன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்றது.

கொழும்பில் அமைந் துள்ள பாதுகாப்பு அமைச்சில் இந்த கலந்துரையாடல் நேற்று முற்பகல் 11.30 அளவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மன்னார் - முள்ளிக்குளத்தில் கடற்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் நிலங்களை விடுவிப்பது தொடர்பில் ஒருவாரகால அவகாசம்வழங்குமாறுவன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் கடற்படை அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்களின் நிலங்களை விடுவிப்பது தொடர்பாக நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை முல்லைத் தீவு மாவட்டசெயலகத்திலும், யாழ்ப்பாணம் வலிகாமம் மக்களின் காணிவிடுவிப்பு தொடர்பாக நாளை மறுதினம் 20 ஆம் திகதி வியாழக் கிழமை காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திலும் கிளிநொச்சி மக்களின் நிலங்களை விடுவிப்பது நாளை மறுதினம் 20 ஆம் திகதி 2 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-5-281)

# நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை

## முல்லையில் 41 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்கிறது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 41 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தகாலத்தில் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள், இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் என தமது உறவுகள் தொடர்பில் அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமக்கு தீர்வுகள் கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்

இந்நிலையில் நேற்றைய தினம் மதத்தலைவர்கள் சிலரும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்டவர்கள் மக்களோடு சந்தித்து கலந்துரையாடினர். (2-5-281)




# மாதர் அமைப்பின் அபிவிருத்திக்கு நிதியொதுக்கீடு

புது வருடத்தை முன்னிட்டு மன்னார் சாந்திபுரம் (சௌத் பார்) பகுதியில்கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற விளையாட்டுவிழாவில்வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் கலந்துகொண்டார். குறித்த நிகழ்வில் மஸ்தான் எம்.பி உரையாற்றுகையில்,

இந்த கிராமத்திலுள்ள மாதர் அமைப்பின் அபிவிருத்திக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான நிகழ்வுகள் மூலம் கிராமமே ஒன்றிணைத்து தங்களது ஒற்றுமையை உறுதிப்படுத்துவது மகிழ்ச்சியளிப்பதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார். (2-5)

# சிறுவர்கள், மாணவர்களுடன் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு



(முல்லைத்தீவு)

தமிழ்த் தேசிய மாணவர் பேரவையின் 2017 ஆம் ஆண்டு சித்திரை தமிழ் புத்தாண்டு விசேட நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுடன் கொண்டாடப்பட்டது.

பேரவையின் பொதுச் செயலாளர், ஏ.யோன்சன் தலைமையில் நடைபெற்ற புத்தாண்டு விசேட நிகழ்ச்சியில் மாணவர்களுக்கான விசேட ஆக்கத்திறன் போட்டிகள் மற்றும் தலைமைத்துவ ஆக்கங்கள், கலாசார விளையாட்டுக்கள் பல்வேறு சமுதாயபூர்வ நிகழ்வுகள் நடைபெற்றதுடன் மாணவர்களுக்கான புத்தாண்டு பரிசில்களும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பேரவையின் தேசிய அமைப்பாளர் தீபன், முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் நிரூபன், புதுக்குடியிருப்பு பிரதேச அமைப்பாளர் புகலரசன், ஒட்டுசுட்டான் பிரதேச அமைப்பாளர் யது மற்றும் கிராம தலைவர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-9)



# குழியினுள் தவறி விழுந்த நான்கு யானைகள் மீட்பு





## தாக்க முற்பட்டவேளை துப்பாக்கி சூட்டில் யானை பலி!

(குருமன்காடு)

வவுனியா ஓமந்தை கொம்பு வைத்த குளத்தில் பாரிய குழியினுள் விழுந்த இரண்டு பெரிய யானைகள், இரண்டு குட்டி யானைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதில் இரண்டு பெரிய யானைகளில் ஒன்று காட்டினுள் விரட்டியடிக்கப்பட்டதுடன் மற்றைய யானை வனத்துறை அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியானது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

ஓமந்தை, கொம்பு வைத்த குளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நான்கு யானைகள் பாரிய குழியில் விழுந்துள்ளதாக ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அங்கு இரண்டு பெரிய யானைகள், இரண்டு குட்டி யானைகள் ஆகியவை குழிக்குள் உள்ளதை அவதானித்ததுடன், வனவிலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினார்கள்.

ஆனால் மாலை 4 மணியாகியும் வன விலங்கு ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சமுகமளிக்காமையினால் பொதுமக்களின் உதவியுடன் ஓமந்தை பொலிஸார் சுமார் 5 மணித்தியாலங்களாக போராடி இரண்டு குட்டி யானைகளையும் மீட்டெடுத்தனர்.

இதன்போது மீட்டெடுக்கப்பட்ட குட்டியானையொன்று அவ்விடத்தில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பொதுமக்களையும் தாக்க முற்பட்டது.

இதன் போது இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

எனினும் இரவு முழுவதும்தொடர்ச்சியாக மீட்புப் பணியை தொடர முடியாமையினால் மீட்பு நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது மீட்கப்பட்ட யானைகளில் ஒன்று பக்கோ இயந்திரத்தையும் அதில் இருந்தவர்களையும் தாக்க முற்பட்டது.

இதன்போது ஒரு யானை வனத்துறை அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியானது. மற்றைய யானை காட்டினுள் விரட்டியடிக்கப்பட்டது. (2-5-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தின் வடிவம் மாற்றமடையும் இன்றைய கலந்துரையாடலில் தீர்மானம்




கிளிநொச்சியில் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தமது உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை 57 ஆவது நாளாகவும் தொடர்கின்ற நிலையில் குறித்த போராட்டத்தின் வடிவத்தை மாற்றி வேறுவடிவத்தில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கந்தசாமி கோவில் அன்னதான மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எனவே கிளிநொச்யிலுள்ள அனைத்துப் பொது அமைப்புக்களையும் இவ் விசேட கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர் கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர். (2-5-312)






# அதிநவீன வசதிகளுடன் மூதாதையர் அன்பு இல்லம்

## கிளிநொச்சியில் அமைக்க தீர்மானம்



கிளிநொச்சியில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள வசதிகளுடன் கூடிய மூதாதையர் அன்பு இல்லம் ஒன்று அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பத்து மணியளவில் கிளிநொச்சி டிப்போசந்திக்கு அருகாமையில் உள்ள அன்பே சிவம் மாற்றுத் திறனாளிகளுக்கான கற்கை நிலையத்தில் அன்பே சிவத்தினுடைய இலங்கைக்கான இணைப்பாளர் குமணன்தலைமையில்நடைபெற்றது. அன்பே சிவத்தினுடைய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக நடைபெற்ற இக்கலந்துரையாடலிலே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

மூதாதையர்அன்பு இல்லமானது கிளிநொச்சிப் பகுதியில் அமைப்பது எனவும் இதனை வெகு விரைவில் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் சுவிஸ் சூரிச் சிவன்கோவில் தலைவர் இராதாகிருஷ்ணன் . அன்பே சிவத்தினுடைய இலங்கைக்கான தலைவர் அருளானந்த சோதி மற்றும் மாவட்ட இணைப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த அன்பே சிவம் அமைப்பானது கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் தாயகப் பகுதியில் தனது சேவையை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-312)

# தமிழ்த்தேசிய மே-நாள் இம்முறை கிளிநொச்சியில்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வேண்டியும் தொழிலாளர் உரிமையை வலியுறுத்தியும் தமிழ்த்தேசிய மே-நாள் இம்முறை கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

உரிமைகளை வலியுறுத்தி உரக்கக் குரல் கொடுக்க ஒன்றிணைவோம்! கிளிநொச்சியில் தமிழ்த்தேசிய மே-நாள்...

மறுக்கப்பட்ட உரிமைகளை வலியுறுத்திஉரக்கக்குரல் கொடுக்கஒன்றிணைவோம்என்பதை வெளிப்படுத்தும் தமிழ்த் தேசிய மே-நாள் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து ஆரம்பமாகும் உரிமைகளை வலியுறுத்திய தமிழ்த்தேசிய மே-நாள் ஊர்வலம் ஏ-9 வீதி வழியாக நகர்ந்து கிளிநொச்சி டிப்போச் சந்தியைச் சென்றடைந்து ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மே-நாள் நிகழ்வுகள்மிகவும்உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளன.

வலிந்து காணாமல்ஆக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்ட தொழிலாளர் குடும்பங்களின் உரிமையை வலியுறுத்தியும். விசாரணைகள் ஏதுமின்றி வெறும் சந்தேக நபர்கள் எனக் கூறி நீண்ட காலமாக சிறைகளில் வாடும் தொழிலாளர்களின் விடுதலையை வலியுறுத்தியும். தொழிலாளர்களது விவசாய நிலங்கள். குடியிருப்பு நிலங்கள். தொழில் மையங்களை அபகரித்துள்ள இராணுவத்தினரை வெளியேற்றுமாறு கோரியும். பூநகரிப் பிரதேசங்களிலுள்ள கடற்றொழில் வளங்களை அபகரித்துள்ள கடற்படையினரை வெளியேற்றி சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்குமாறு வலியுறுத்தியும் என இன்னும் பல உரிமை மறுப்புக்களுக்கெதிராகக் குரல்கொடுத்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உரிமைகளை வலியுறுத்த ஒன்றிணையும்தமிழ்த்தேசிய மே-நாளில் தொழிலாளர்கள். பொது அமைப்புக்கள். மக்கள். மக்களின் உரிமைக்காகப் போராடும் அரசியல் பிரமுகர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு உரிமைகளை வென்றெடுக்கப் பலம் சேர்க்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்த்தேசிய மே-நாள் ஒழுங்கமைப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள உரிமைகளை வலியுறுத்தும் தமிழ்த்தேசிய மே-நாள் நிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி. கண்டாவளை. பச்சிலைப் பள்ளி. பூநகரி ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த பொது அமைப்புக்கள். மக்கள் எனப் பெருமளவானவர்கள் உரிமைக்காக ஒன்றிணைந்து குரல்கொடுக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-5)

# 27 ஆவது நாளாகவும் தொடர்கிறது பன்னங்கண்டி மக்களின் போராட்டம்





கிளிநொச்சி பன்னங்கண்டி சரஸ்வதி கமம். ஜொனிக் குடியிருப்பு பிரதேச மக்கள் தமது குடியிருப்பு காணிக்கான ஆவணம் மற் றும் அடிப்படை வசதிகள் .நிரந்தர வீட்டுத் திட்டம் என் பன இதுவரை கிடைக்கவில்லை. எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது தயவு செய்து எமக்கான காணி உரிமத்தினை வழங்குங்கள்எனக்கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம்நேற்று திங்கட்கிழமை 27 ஆவது நாளாகவும் தொடர் ந்தது.

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-5.312)

# வீதியை அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி. வன்னேரிக்குளம் கிராமத்தில் கடந்த 64 ஆண்டுகளாக நிரந்தர வீதி அமைக்கப்படவில்லை.

குண்டும் குழியுமான செம்மண் புழுதி நிறைந்த வீதி வழியாகவே தாம் பயணிக்க வேண்டி இருப்பதன் காரணமாக. வன்னேரிக்குளத்துக்கு நிரந்தர வீதியை அமைத்துத் தருமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இக்கிராமத்தில் தற்போது 500 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் இக்கிராமத்துக்கு நிரந்தர வீதி உருவாக்கப்படவில்லை.

30 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரத்துக்குச் செல்ல. சேதமடைந்த வீதி வழியாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, வன்னேரிக்குளம் கிராமத்துக்கும் அக்கராயன் கிராமத்துக்கும் இடையிலான 10 கிலோமீற்றர் வீதி. மிகவும் சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர். (2-5)

# வீடொன்றில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வீடொன்றில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5மணியளவில் வவுனியா வெளிக்குளம் பகுதியில் நடைபெற்றுள் ளது.

இதில் 61 வயதுடைய குடும்பஸ்தரே தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டவராவர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

பிரஸ்தாப நபர் வேட்டியில் தூக்கில் தொங்கிய நிலையில் வீட்டின் முன் பகுதியில் காணப்பட்டுள்ளார். இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழுங்கப்பட்டது சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார். மரண விசாரணை அதிகாரி சடலத்தை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

தூக்கில் தொங்கியவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை என்றும் நில அளவைத் திணைக்களத்தில் முன்னர் பணியாற்றிய வர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-5-9-250)

# இலவச கணனி பயிற்சி ஆரம்பம்

நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் முருங்கன் பொன்தீவு கண்டல் கிராமத்தில் இலவச கணனி பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் இயக்குநர் கே.பவமொழிபவன் தலைமையில் நேற்று முன்தினம் காலை பொன்தீவு கண்டல் ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

நண்பனின் தேவை நற்பணி மன்றத்தின் 16 கிராமமாக குறித்த பொன்தீவு கண்டல் கிராமம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 3 மாதங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த கணனி பயிற்சி நெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது விருந்தினர்களாக பங்குத்தந்தை லோரன்ஸ்.வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த கணனிப் பயிற்சியை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேவிளம்பி வருட இராசி பலன்

## 14.04.2017 - 13.04.2018

## கேது மாற்றம் நன்மை தரும்! கேட்ட உதவிகள் கிடைத்து விடும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



மற்றவர்களைப் பார்த்த உடன் எடைபோடும் ஆற்றல் பெற்ற கும்ப இராசி நேயர்களே!

ஹேவிளம்பி ஆண்டு பிறக்கப் போகிறது. புத்தாண்டு பிறப்பது உங்கள் இராசிநாதனான சனிபகவானுக்கு நட்பு கிரகமாக விளங்கும் சுக்ரனுக்குரிய நாளான வெள்ளிக்கிழமை ஆகும். எனவே இந்தப் புத்தாண்டு உங்களுக்கு புதிய திருப்பங்களை ஏற்படுத்தும். தேவைக்கு ஏற்ற அளவு வருமானமும் தித்திப்பான தகவல்களும் வந்து கொண்டே இருக்கும்.

வருடம் பிறப்பதற்கு முன்னதாகவே நீங்கள் அசைபோட்டுப் பார்ப்பீர்கள். புத்தாண்டு நமக்கு எப்படியிருக்கும்?, புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக் குமா? சுற்றிவரும் கோள்களில் ராகு, கேது மற்றும் சனி, குரு ஆகிய அனைத்தும் பெயர்ச்சியாகப் போகின்றதே அந்த மாபெரும் கிரகங்களின் பெயர்ச்சியால் மனநிம்மதி நமக்குக் கிடைக்குமா?, பணவரவு திருப்திகரமாக இருக்குமா? என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பீர்கள். உங்கள் எண்ணங்கள் ஈடேற வழிவகுத்துக் கொடுக்கப் போகின்றது இந்தப் புத்தாண்டு.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதேபோல உங்கள் இராசிக்கு தனலாபாதிபதியாக விளங்கும் குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இந்த இரண்டு பேரின் வக்ர இயக்கத்தால், திடீர் விரயங்களும் தேவைக்கேற்ற பணமும் வந்து கொண்டே இருக்கும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து, வளர்ச்சி கூட வழிவகுத்துக் கொடுப்பர்.

அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் அவ்வளவு நல்லதல்ல. தடைகள் அதிகரிக்கும். மளமளவென்று நடந்த காரியங்கள் அப்படியே நிற்கலாம். அசையாச் சொத்துகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பாம்புக் கிரகங்கள் ஆடி 11இல் விலகிய பிறகு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து அலை மோதும். துரத்தி வந்த துன்பங்கள் விலகி ஓடும்.

என்ன இருந்தாலும் ஆண்டின் தொடக்கத்தில் சனி, குரு, ராகு, கேது ஆகியவற்றிற்குரிய பரிகாரங்களை, அதற்கு உகந்த ஸ்தலங்களுக்குச் சென்று செய்து கொள்வது நல்லது. தொடக்கத்தில் குருவின் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இடத்தைக் குறிப்பிடும் குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால், இல்லத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். இழந்தவற்றை மீண்டும் பெறுவீர்கள். தட்டுப்பாடுகள் அகலும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்திணைய வாய்ப்பு ஏற்படும்.

கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். கொள்கைப் பிடிப்பை ஒருசில சமயங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். உங்கள் மீது சுமத்தப்பட்ட வீண்பழிகள் மாறும். மேலதிகாரிகள் உங்கள் திறமையை அறிந்து பொறுப்புகளைக் கொடுப்பார்கள். தாய்வழி பிரச்சினை அகலும். அசையாச் சொத்து வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அண்டை நாடுகளில் இருந்துவரும் அழைப்புகள் ஆனந்தம் வழங்கும்.

வருடத் தொடக்கத்தில் சனிபகவான் 10ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். முத்தான தொழிலில் முதலீடு செய்ய வாய்ப்பு உருவாகும். சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். பங்குதாரர்களின் ஜாதகத்தை உங்கள் ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து சஸ்டாஸ்டம தோஷம் இல்லையா, என்று தெரிந்து சேர்த்துக் கொள்வது நல்லது. யோக ஜாதகங்களை கூட்டாகச் சேர்த்துக் கொண்டால், யோகங்கள் வந்து சேரும்.

ஆண்டின் தொடக்கத்தில் புத-சுக்ர யோகமும், பரிவர்த்தனை யோகமும், சனி, செவ்வாய் பார்வையும் உள்ளது. சனியைச் செவ்வாய் பார்ப்பதால் மனப் போராட்டம் அதிகரிக்கும். குருவின் பார்வை செவ்வாய் மீது பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். சூழ்ச்சிகள் முறியடிக்கப்படும். பல மாதங்களாக தள்ளிப்போன பதவி கிடைக்கலாம்.

பிரதோஷ நேரத்தில் நந்தியம்பெருமானையும், செவ்வாய்க்கிழமை தோறும் வடக்கு நோக்கிய துர்க்கையையும் வழிபாடு செய்யுங்கள். ஆடி 11ஆம் திகதிக்குள் ராகு கேதுக்களுக்குரிய சிறப்பு பரிகாரங்களைச் செய்து கொண்டால் தான் இல்லத்தில் உள்ள பூசல்கள் மறை யும். இல்லறம் நல்லறமாக மாறும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள். நிதி நெருக்கடி அகன்று நிம்மதி கிடைக்கும்.

ராகு-கேதுக்களின் பெயர்ச்சிக் காலம்!

இந்த ஆண்டு 27.7.2017 ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நடைபெறவிருக்கிறது. இந்தப் பெயர்ச்சி உங்களுக்கு இனிய பெயர்ச்சியாக அமையும். 6ஆம் இடத்து ராகு அஷ்டலட்சுமி யோகத்தை வழங்கும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்டு வந்த பதவி உயர்வு கிடைக்கும். வேலை பார்க்கும் நிறுவனத்தின் மூலமாகவே வெளிநாடு செல்லும் வாய்ப்பு உருவாகும். பணம் பல விதங்களில் வந்து பையை நிரப்பும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தாய்வழி உறவுகள் தக்க சமயத்தில் கைகொடுக்கும்.

வீட்டைப் புதுப்பித்தல் அல்லது புது வீடு கட்டுதல், வீட்டை விரிவுபடுத்துதல் போன்றவற்றில் உள்ள பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கையில் பணம் வைத்துக்கொண்டு தான் காரியங்களைச் செய்ய முடியும் என்ற நிலை மாறும்.

இந்த ஆண்டு ராகு 6இல் வருவதால் தனவரவு தாராளமாகும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். பண தட்டுப்பாடு இல்லையென்றாலே பாதி மகிழ்ச்சி வந்துசேரும். அரசாங்க உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கிடைப்பதற்கான வாய்ப்பு நெருங்கி வரலாம். ஒருசிலருக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். இதுவரை அசையாச் சொத்துகள் வாங்கும் பொழுது பத்திரப் பதிவில் தடைகள் ஏற்பட்டிருக்கலாம். அந்த தடைகள் இப்போது அகலும். நியாயமான முறையில் பாகப்பிரிவினைகள் நடைபெறும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

12ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். விரயங்களைச் சுபவிரயங்களாக மாற்றியமைத்துக் கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். மின்சாதனப் பொருட்கள், ஆடை, ஆபரண அலங்காரப் பொருட்கள், அத்தியாவசியப் பொருட்களையும் வாங்குவதன் மூலமாக வீண் விரயங்களை, சுப விரயங்களாக மாற்றிக் கொள்ளலாம். ராகு- கேது பிரீதி செய்வது யோகத்தை வரவழைத்து கொடுக்கும்.

குருப்பெயர்ச்சிக் காலம்!

இந்த ஆண்டு ஆவணி மாதம் 17ஆம் திகதி (02.09.2017) குருப்பெயர்ச்சி நிகழ விருக்கிறது. சாதனைகளை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறும் நேரமிது. சோதனைகள் அகலும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். 9இல் சஞ்சரிக்கும் குரு, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கப் போகிறார். பொன், பொருட்கள் சேரும். புகழ் கூடும். புதிய திருப்பங்கள் ஏற்படும்.

ஒன்பதில் குருவும் வந்தால்
ஒப்பற்ற வாழ்க்கை சேரும்!
பொன் பொருள் அதிகரிக்கும்!
பூமியால் இலாபம் கிட்டும்!
நண்பர்கள் ஒத்துழைப்பால்
நலம்யாவும் வந்து கூடும்!




இன்பத்தின் எல்லை காண
இறையருள் கை கொடுக்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 9ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, குருவின் பார்வை பலம் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே ஆரோக்கிய தொல்லை அகலும். மருத்துவச் செலவுகள் குறையும். செய்தொழில் விறுவிறுப்பாக நடைபெறும். திட்டமிட்டு வாழ கற்றுக் கொள்வீர்கள். திடீர் வரவுகள் அதிகரிக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

குருவின் பார்வை 3,5 ஆகிய இடங்களில் பதிவதால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தர்ம சிந்தனை மேலோங்கும். தனவரவு திருப்தி தரும். பணிகளில் ஏற்பட்ட தொய்வு அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பூர்வீகச் சொத்துகளை விற்று, அதை தொழிலுக்கு முதலீடு செய்ய முன்வருவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட பிணக்குகள் அகலும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

சனிப்பெயர்ச்சி காலம்!

இந்த ஆண்டு மார்கழி மாதம் 4ஆம் திகதி (19.12.2017) சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. ஒரு வகையில் இது ஒரு இனிய காலமாகும்.

உங்கள் இராசிநாதனாகவும் 12ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சனிபகவான், இப்பொழுது இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விரயத்திற்கு ஏற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். எந்தக் காரியத்தையும் பணத்தை கையில் வைத்துக் கொண்டு செய்ய இயலாது.

காரியத்தை தொடங்கி விட்டால் பணம் தானாகவே வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள்.

கூலி வேலை பார்ப்பவர்கள் இனி தனித்து இயங்கவேண்டும் என்று பிரியப்படுவர். அதற்கு ஏற்ற விதத்தில் காரியம் கைகூடிவரும். பால்ய நண்பர்களின் சந்திப்பு நிகழும். அந்த நண்பர்கள் தங்களையும் தொழிலில் பங்குதாரர்களாக சேர்க்க கோரிக்கை வைப்பார்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும் தானாக வந்து சேரும். அத்தனைக்கும் மேலாக நல்ல ஊதியத்துடன் வெளிநாடு செல்லும் வாய்ப்புகளும் கிடைக்கும். வசதி பெருக்கமும், வாகன யோகமும் உண்டாகும். வளர்ச்சியின் உச்சத்திற்கு செல்லும் இந்த நேரத்தில் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

சனிக்கிழமை தோறும் அதிகாலையில் ஆனைமுகப்பெருமானையும், உச்சிகாலத்தில் சனிபகவானையும், மாலையில் அனுமனையும் வழிபடுவது நல்லது. சிறப்பு வழிபாடாக தஞ்சை பெரியகோவில் சிவன், உமையவள், நந்தி, வராஹி உள்ளிட்ட அனைத்து தெய்வங்களையும் வழிபடுவதன் மூலம் வளர்ச்சி கூடும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

கும்ப இராசியில்பிறந்த பெண்களுக்கு, குடும்ப முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் திருப்தியளிக்கும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு திருமண யோகம் கைகூடும். தேடிவரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. கணவன்-மனைவி உறவால் கனிவும் பாசமும் அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். பணியாளர்களின் தொல்லை அகலும். பணி மாற்றத்தின் மூலம் ஒரு சிலருக்கு வெளிநாட்டு யோகம் கூடும். சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு சந்தோஷத்தின் எல்லை அதிகரிக்கும். சுயதொழில் புரிவோருக்கு கணிசமான ஆதாயம் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப் படத்தக்கதாக இருக்கும். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொள்ள, ராகு-கேதுக்களுக்குரிய சிறப்பு வழிபாடுகளையும், பௌர்ணமி வழிபாடுகளையும் செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கத்தோலிக்கர்களினால் அனுஷ்டிக்கப்படும் புனித வாரத்தின் பெரிய வெள்ளிக்கிழமை ஆசந்தி நிகழ்வு இம்முறை முதல் முறையாக கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய இளைஞர்களினால் செபமாலை தாசர் சபை அருட்தந்தை பிரான்ஸிஸ் ஜெயம் தலைமையில் நடத்தப்பட்டது. படங்கள்; பொ.சோபிகா

# பௌதீக விஞ்ஞானத்தில் புரட்சி செய்த அல்பேர்ட் ஐன்ஸ்டீன்

கடந்த 2005ஆம் ஆண்டை உலக பௌதீக ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபையும் உல்க தூய-பிரயோக பௌதீக சம்மேளனமும் இணைந்து பிரகடனம் செய்தன. இதன் மூலகர்த்தாவாக இருப்பவர் மாபெரும் விஞ்ஞானியான அல்பேர்ட் ஐன்ஸ்டீன் ஆவார்.

பௌதீகவியல் என்பது இயற்கையின் பௌதீகப் பொருட்களை ஆராய்கின்ற விஞ்ஞானமாகும். குறிப்பாக பௌதீக இயக்கம், ஒலி, ஒளி,மின்,வெப்பம், காந்தம் போன்ற சக்தி வகைகளையே ஆராய்கின்றது.

பௌதீகவியலின் செல்வாக்கு அருகிவருகின்ற இக்காலப்பகுதியில் அதனை உயரச் செய்ய வேண்டுமாயின் அல்பேர்ட் ஐன்ஸ்டீனை நினைத்துப்பார்க்கவேண்டும். பௌதீகவியலுக்காக தங்களை அர்ப்பணித்த கலிலியோ கலிலி, கெப்லர், நியூட்டன், மார்க்ஸ்வெல் வரிசையில் இவரும் புரட்சிகரமான விஞ்ஞானியாவார்.

உலக வரலாற்றில் 1905ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாகும். இவ்வாண்டிலே தான் அமெரிக்காவில் ரைட் சகோதரர்கள் முதன் முதலாக பறக்கும் விமானத்தை வடிவமைத்தார்கள். 1905 ரஷ்யாவிலே புரட்சிகரமான ஆண்டாக கருதப்பட்டது. இவ்வாண்டிலே தான் ஐன்ஸ்டீன் அவர்களும் உலகத்தை உலுக்கிய ஐந்து கட்டுரைகளை வரைந்தார். சேர் ஐசாக் நியூட்டன் நவீன விஞ்ஞானத்தின் தந்தையென போற்றப்படுகின்றார். ஆனால் ஐன்ஸ்டீனோ புரட்சிகர விஞ்ஞானத்தின் தந்தையாக பலராலும் வர்ணிக்கப்படுகின்றார்.

இவர் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஜேர்மன் நாட்டிலே உல்ப் என்னும் இடத்தில் பிறந்தார். தனது கல்வியை ஜேர்மனிய முனிச் நகர ஜீம்னாசியத்திலும் பின்னர் உயர் கல்வியை சூரிச் சமஷ்டி தொழில்நுட்பவியல் நிறுவகத்திலும் மேற்கொண்டார்.

பின்னர் வேலை தேடும் படலத்தை மேற்கொண்ட ஐன்ஸ்டீன் தொண்டர் ஆசிரியராகவும் சூரிச்



ஆவணக் காப்பு நிலையத்தில் தொழில்நுட்பவியல் நிபுணராகவும் தொழில் புரிந்தார்.

இந் நேரத்தில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்து ஆராய்ச்சி செய்தார். சார்பு இயல் ஒளியின் விளைவு பிரௌனியின் இயக்கம் மூலக்கூற்று விசைகள், ஒளியின் உற்பத்தி, நிலைமாற்றம் சம்பந்தப்பட்ட ஒரு நாடியறி முறை என்னும் தலைப்புகளில் ஐந்து கட்டுரைகளை வரைந்து ஜேர்மன் விஞ்ஞான சஞ்சிகையில் எழுதி வெளியிட்டார்.

கணிதவியலில் நேர்கோடுகளை வரைகின்றோம். ஆனால் ஐன்ஸ்டீன் சிந்தனையின் படி எல்லாம் வளை கோடுகளேயாகும்.

யாம் நேர் கோட்டு இயக்கம் பற்றிய சேர் ஐசாக் நியூட்டன் அவர்களின் மூன்று விதிகளைப் படித்துள்ளோம். அதில் இரண்டாவது விதி P=MF என்னும் சமன்பாட்டின் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது. இதில் வேகம் அதிகரித்துச் செல்லும் போது திணிவு M இல் மாற்றம் ஏற்படும் என ஐன்ஸ்டீன் விளக்குகிறார்.

பிரபஞ்சத்தில் ஒளியின் வேகத்தை எந்தப்பொருளும் மிஞ்சாது. பிரபஞ்ச இயக்கத்தில் ஒளியின் வேகம் ஒரு மாறிலியாகும்.

அடுத்து திணிவுக்கும் சக்திக்கும் இடையேயான தொடர்பை அழகாக விளக்குகின்றார். ஒரு திணிவின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க அது சக்தியாக மாறுகின்றது. இவ்வாறு பொருளொன்று சக்தியாக மாறுவதையும் சக்தி பொருளாக மாறுவதையும் விளக்குகின்றார். அணுவொன்றிலிருந்து வெளியேறும் சக்தியை அளவிடுவதற்கு $E=MC^2$ என்னும் கணித சூத்திரத்தை கண்டுபிடித்து தந்த பெருமை ஐன்ஸ்டீனையே சாரும்.

அதாவது M திணிவுடைய அணுவொன்றிலிருந்து வெளியேறும் சக்தியானது அத்திணிவை ஒளியின் வேகத்தின் வர்க்கத்தால் பெருக்குவதற்கு சமனாகும். விஞ்ஞானத்திலே கண்டு பிடிப்புக்கள் உய்த்தறி முறை, தொகுத்தறி முறை இரண்டு கலந்த விஞ்ஞான முறை என்பவற்றின் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது.

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் அவர்களைப் பொறுத்த வரை உள்ளுணர்வு மூலம் பகுத்தறி முறை மூலம் எளிமையாக தனது சிந்தனைகளை வெளிப்படுத்தினார். பின்னால் வந்த விஞ்ஞானிகள் பரிசோதனை மூலம் இவ் வழிகளை மெய்ப்பித்தார்கள். இதனால் அவருக்கு நோபல் பரிசு வழங்கி உலகம் கௌரவித்தது.

எனவே அவரின் பௌதீகவியல் விதிகளை மாத்திரமல்ல அவரின் குண இயல்புகளையும் நாம் கற்க வேண்டும். அவர் ஜேர்மன் நாட்டில் ஜிம்னாசியத்தில் கற்றபோது ஆசிரியர்களின் அணுகுமுறை அவருக்கு பிடிக்கவில்லை.

இதனால் ஒரு சில ஆண்டுகள் பள்ளிப் படிப்பை இடைநிறுத்தினார். சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் பள்ளிப் படிப்பு அவருக்கு உகந்ததாக அமைந்தது. பள்ளிப் படிப்பில் கணிதம், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் உயர் புள்ளிகளைப் பெற்றார். பின்னர் சூரிச் பெடரல் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் பட்டம் பெற்ற இவர் பல சாதனைகளைப் படைத்தார்.

இதனையடுத்து ஜேர்மனியில் உள்ள பராக் பல்கலைக்கழகம், பெர்லின் பல்கலைக்கழகம் என்பவற்றில் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

அப்போது ஹிட்லர் யுகங்களுக்கு எதிரான வன்முறைகளை மேற்கொண்டு 60 இலட்சம் யூதர்களைக் கொன்றொழித்தார். இவரது நாஸிக் கட்சி 1936 இல் ஆட்சியைக் கைப்பற்றி பல கொடுமைகளை இழைத்தது.

ஹிட்லரின் இனவாதத்திற்கும், வன்முறைகளுக்கு எதிராகவும், சமாதானத்தையும், மனிதாபிமானத்தையும், வலியுறுத்தி ஊர்வலம் நடத்தினர்.

ஹிட்லரின் பயங்கரவாதத்திலிருந்து தப்பித்து ஐக்கிய அமெரிக்க நாட்டிற்கு சென்று பிரின்ஸ்டைன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அந் நாட்களில் அணுசக்தி தொடர்பாக பரிசோதனைகளில் ஈடுபட்டார்.

அவர் அஹிம்சாவாதியாக, சமாதான விரும்பியாக வாழ்ந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தின் தலைவரும், வழிகாட்டியுமான மகாத்மா காந்தியடிகளை நேசித்தார்.

“ இந்த உலகத்தில் காந்தியடிகளைப் போன்று ஒரு மனிதர் வாழ்ந்தாரா? என எதிர்காலச் சந்ததியினர் ஐயுறுவர்'' என ஒரு சந்தர்ப்பத்தில் ஐன்ஸ்டீன் கூறினார்.

இவர் இயற்கை நேயமுள்ள கலைஞருமாவார். பியானோ வாசிப்பதில் தேர்ச்சியுள்ளவராக இருந்தார். 1879ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி பிறந்த அவரது 100 ஆவது பிறந்த தினமாகிய 1979இல் மக்கள் சீனக் குடியரசில் அன்னாரது பௌதீகவியல் கோட்பாடுகள் புத்தூக்கத்துடன் போதிக்கப்பட்டன.

உலக யூதர்கள் 1947ஆம் ஆண்டு இஸ்ரேல் என்னும் தனியரசை உருவாக்கினார்கள். அதன் இரண்டாவது பிரதமராக பதவியேற்க வருமாறு பேரறிஞர் ஐன்ஸ்டீனை அழைத்த போது அவர் அதனை விரும்பவில்லை. இது அவரது தீர்க்கதரிசனத்தை புலப்படுத்துகின்றது. இங்கிலாந்து தத்துவ ஞானி பேட்டன் ரசல் (Bertend Russel) கைவிரல் விட்டு எண்ணக் கூடியவர்களே ஐன்ஸ்டீனின் நூல்களைக் கற்றிருக்கின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார். எனவே இவரது பௌதீகக் கோட்பாடுகளை நவீன தகவல் தொழில்நுட்ப முறைகளில் அறிந்து அவரைப் போல் இயற்கை சமூக, மனிதநேயமுள்ளவர்களாக வாழ்வோமாக!

பி. முத்துலிங்கம்,
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

## நீரில் மூழ்கி மாணவன் மரணம்

(கொழும்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆரையம் பதி கர்பலாக் கடலில் நீராடச் சென்ற மாணவனொருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை குறித்த கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, நீரில் மூழ்கிக் காணாமல்போன மாணவனின் சடலம் நேற்று நண்பகல் காத்தான்குடி நதியா கடற்கரையில் மீட்கப் பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஆரையம்பதி -3, பழைய கல்முனையைச் சேர்ந்த வீரசிங்கம் தர்மதன் (வயது - 17) என்ற மாணவன், தனது குடும்பத்தினருடன் கட லில் நீராடச் சென்றுள்ளார்.

இந்நிலையில் திடீரென்று ஏற்பட்ட மாணவன் கடல் நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இம்மாணவனைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடு பட்டுவந்த நிலை யில், குறித்த மாணவனின் சடலம் நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நடை பெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ மற்றும் 2 பி பெறுபேற்றை இம் மாணவன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வேலைவாய்ப்பிற்கான நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

மனித வலுவேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்கல்வி வேலை வாய்ப்பிற்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் 20 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம் பெறும்.

இது தகைமைக்கேற்ப விரும்பிய துறையில் விரும்பிய தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது.

தொழில் தரு நர்களுடனான நேர்முகத் தேர்வின் போது அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், சுய விபரக் கோவை என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக தகவல்களுக்கு தென்மராட்சி பிரதேச செயலக மனிதவள அபிவிருத்திப் பிரிவின் 021 227 0011 எனும் தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொள்ளவும் என தென் மராட்சி உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை இலை சின்னத்தைப்பெற இலஞ்சம் தினகரன் மீது டில்லி பொலிஸார் வழக்குப் பதிவு

(சென்னை)

அ.தி.மு.கவின் அதிகார பூர்வ இரட்டை இலைச் சின்னத்தை பெற இலஞ்சம் வழங்கியதாக டிடிவி.தினகரன் மீது டில்லி குற்றப்பிரிவு பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அதே வேளையில், இலஞ்சம் பெற்றதாக டில்லியைச் சேர்ந்த இடைத்தரகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபரின் பெயர் சுகேஷ் சந்திரசேகரா என்றும் அவரிடமிருந்து பெருந்தொகை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் டில்லி பொலிஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸில் பதிவான முதல் தகவல் அறிக்கையில் (எப்.ஐ.ஆர்), சுகேஷ் சந்திரசேகரா மீது இலஞ்சம் மற்றும் சதி குற்றச்சாட்டுகளும் டி.டி.வி. தினகரன் மீது இலஞ்சப் புகாரும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### ரூ.1.5 கோடி சிக்கியது

டில்லியின் மத்திய பகுதியில் உள்ள ஒரு விடுதியில் நேற்று அதிகாலை பொலிஸார் திடீர் சோதனை நடத்தினர். இதில், சுகேஷ் சந்திரசேகரா என்பவரிடம் இருந்து ரூ.1.5 கோடி ரொக்கம் மற்றும் பிஎம்டபிள்யூ, மெர்சிடீஸ் கார்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சுகேஷுடன் சேர்த்து மேலும் சிலரை பொலிஸார் தம் விசாரணை வளையத்தில் பிடித்துள்ளனர். இவர்களிடம் நடத்திய விசாரணையில் பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில், ஆர்.கே.நகர் இடைத்தேர்தலுக்கு முன்பாக முடக்கப்பட்ட இரட்டை இலை சின்னத்தை பெற அ.தி.மு.க. அம்மா கட்சியின் சார்பில் துணை பொதுச் செயலாளர் தினகரன் ரூ.60 கோடி தர முன்வந்ததாக கூறப்பட்டுள்ளது. இதற்காக அவரிடம் இருந்து பெறப்பட்ட தொகையில் ரூ.1.5 கோடியை சுகேஷிடம் இருந்து பொலிஸார் கைப்பற்றி உள்ளதாக கூறி உள்ளனர். இவர்களிடம் இருந்து மெர்சிடீஸ்



மற்றும் பிஎம் டபிள்யூ ஆகிய சொகுசுக்கார் கள் இரண்டும் பறிமுதல செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு காரின் பதிவு எண் மீது ராஜஸ்தானின் நாடாளுமன்ற உறுப்பினர் எனக் குறிப்பிடபட்டுள்ளது. எனவே, தினகரனிடம் விசாரணை நடத்த முடிவு செய்துள்ள டில்லியின் குற்றப்பிரிவு பொலிஸார் அவருக்கு தகவல் அனுப்பியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### தினகரன் மறுப்பு

இதற்கிடையில், சென்னையில் நேற்றுக் காலை செய்தியாளர்களை சந்தித்த தினகரன், டில்லியில் கைதான நபர் யாரென்றே எனக்குத் தெரியாது. சின்னம் பெற வேண்டும் என்பதற்காக நான் யாருக்கும் பணம் கொடுக்கவில்லை. இது தொடர்பாக டில்லியைச் சேர்ந்த யாரையும் நான் தொடர்பு கொள்ளவில்லை. இந்தப் பிரச்சினையை நான் சட்டரீதியாக அணுகுவேன். இயக்கத்தை அழிப்பதற்காக யாரோ சிலர் செய்யும் சதி இது என்றார்.

மேலும் அவர் பேசும் போது, தமிழக அமைச்சர் விஜயபாஸ்கரை நீக்க வேண்டும் என யாரும் எனக்கு நெருக்கடி தரவில்லை. கட்சிக்குள் எந்த சலசலப்பும் இல்லை எனத் தெரிவித்தார். (இ-3)

## பாரதச் செய்தி

## யாசகம் பெற்ற 163 பேர் கைது

(சென்னை)

தமிழகத்தில் குழந்தைகளை கடத்தி யாசகம் பெற வைக்கும் கும்பலின் நடமாட்டம் இருப்பதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வந்தன.

இதனை உறுதி செய்யும் வகையில் குழந்தைகள் காணாமல் மாயமாகும் சம்பவங்களும் அடிக்கடி அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் சென்னையில் யாசகர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது.

வீதியோரங்களில் யாசகம் எடுத்தவர்கள் வாகனங்கள் நிற்கும் போது கார் கண்ணாடியை தட்டி யாசகம் கேட்பவர்கள் என்று அனைவரும் பிடிபட்டனர்.

கடந்த 2 நாட்களாக நடந்த இந்தக் கைது நடவடிக்கையில் 34 சிறுவர் - சிறுமிகள் உட்பட 163 பேர் கைது செய்யப்பட்டனர். (இ-3)

# அ.தி.மு.க. இணைப்புக்கு ஆதரவு; ஓ.பி.எஸ். அணியில் இணைய அமைச்சர்கள் - நிர்வாகிகள் முடிவு



(சென்னை)

அ.தி.மு.க. நிர்வாகிகளும் அமைச்சர்களும் ஓ.பி.எஸ். அணியில் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பேச்சுவார்த்தைகளில் அ.தி.மு.க. அம்மா அணி மூத்த தலைவர்களும், ஓ.பி.எஸ். அணியினரும் ஈடுபட்டுள்ளனர்.

ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு அவரது தோழி சசிகலா அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றார்.

கட்சி மற்றும் ஆட்சியின் நலன் கருதி அப்போது அ.தி.மு.க. மூத்த தலைவர்களும், பெரும்பாலான நிர்வாகிகளும் சசிகலா தலைமையை ஏற்றுக் கொண்டனர்.

திடீரென முதலமைச்சர் பதவிக்கு முயற்சி செய்தது, பிறகு சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று சிறைக்கு சென்றது ஆகியவை சசிகலா மீதான நம்பிக்கையை கட்சிக்காரர்களிடம் குறைக்க செய்தது.

அதோடு கட்சியில் பல மூத்த தலைவர்கள் உள்ள நிலையில் தனது அக்கா மகன் டி.டி.வி.தினகரனை அவர் துணைப் பொதுச் செயலாளர் ஆக்கியது பலரிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் ஆர்.கே. நகர் தொகுதியில் வாக்கு பெறுவதற்காக ரூ.89 கோடி வரை பணப்பட்டுவாடா நடந்திருப்பதாக வெளியான குற்றச்சாட்டுகளும் சசிகலா குடும்பத்தினர் மீது அ.தி.மு.க. தலைவர்களுக்கு அதிருப்தியை அதிகரிக்கச் செய்தது.

இதையடுத்து மக்கள் மத்தியில் அ.தி.மு.கவுக்கு ஆதரவு குறைந்திருப்பதாக மூத்த தலைவர்கள் கருதுகிறார்கள். தொடர்ந்து இதே நிலை நீடித்தால் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்ற முடியாது என்ற மனநிலை அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் பலரிடம் ஏற்பட்டுள்ளது.

எனவே அ.தி.மு.கவில் இருந்து விலகி இருக்கும் படி சசிகலாவையும், தினகரனையும் வலியுறுத்த அ.தி.மு.க. அம்மா அணி தலைவர்கள் சிலர் முடிவு செய்தனர். அண்மையில் அவர்கள் தினகரனை சந்தித்து இதைத் தெரிவித்தனர்.

ஆனால் டி.டி.வி.தினகரன் அ.தி.மு.கவில் இருந்து ஒரு போதும் விலக இயலாது என்று திட்டவட்டமாக கூறியதாக தெரிகிறது. இதையடுத்து இன்று மீண்டும் தினகரனை சந்தித்து பேச அ.தி.மு.க. அம்மா அணியைச் சேர்ந்த சில அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் முடிவு செய்துள்ளனர்.

அப்போது மீண்டும் கட்சியில் இருந்து விலக தினகரனை அவர்கள் வலியுறுத்தவுள்ளனர்.

எனவே அ.தி.மு.கவில் அடுத்தடுத்து மாற்றங்கள் வரும் என்று தெரிகிறது.

சசிகலா - தினகரன் இருவரும் பொறுப்புகளில் இருந்து இராஜினாமா செய்ய மறுத்தால் அந்த அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் அ.தி.மு.க. அம்மா அணியில் இருந்து விலகி ஓ.பி.எஸ். அணியில் இணைய திட்டமிட்டுள்ளனர்.

புதன்கிழமை அவர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுவார்கள் என்று தெரிகிறது.

அவர்களுடன் அ.தி.மு.க. நிர்வாகிகளும் பெருமளவில் ஓ.பி.எஸ். அணிக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பேச்சுவார்த்தைகளில் அ.தி.மு.க. அம்மா அணி மூத்த தலைவர்களும், ஓ.பி. எஸ். அணியினரும் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

சசிகலா குடும்பம் இல்லாத அ.தி.மு.கவை உருவாக்க வேண்டும் என்பதில் இந்த தலைவர்கள் தீவிரமாகவுள்ளனர். (இ-3)

# முழு அடைப்பு போராட்டத்துக்கு விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு ஆதரவு

## பி.ஆர்.பாண்டியன் அறிவிப்பு



(மன்னார்குடி)

25 ஆம் திகதி நடைபெறும் முழு அடைப்பு போராட்டத்துக்கு விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு ஆதரவு அளிப்பதாக பி.ஆர். பாண்டியன் அறிவித்துள்ளார்.

தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது.

தமிழ்நாட்டில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள முழு அடைப்பு போராட்டத்துக்கு அனைத்து அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் ஆதரவு அளித்து, போராட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டும். விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு 25 ஆம் திகதி நடைபெறும் போராட்டத்துக்கு முழு ஆதரவு அளிக்கும். அன்றைய தினம் விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் ரயில் மறியல் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி ரயில் மறியல் போராட்டம் நடைபெறும். (இ-3)

## எதிர்க்கட்சியினருக்கு பிரதமர் கண்டனம்

(டில்லி)

இதர பிற்படுத்தப்பட்டோர் (ஓபிசி) ஆணையத்துக்கு அரசியல் சாசன அந்தஸ்து வழங்க வகை செய்யும் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் எதிர்க்கட்சியினருக்கு பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநில தலைநகர் புவனேஸ்வரத்தில் பாஜக தேசிய செயற்குழு கூட்டம் (2 நாட்கள்) நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, கட்சித் தலைவர் அமித் ஷா, மத்திய அமைச்சர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இறுதி நாளான நேற்று முன்தினம் இதர பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு அரசியல் சாசன அந்தஸ்து வழங்குவது தொடர்பான புதிய மசோதா மீது விவாதம் நடை பெற்றது. அப்போது குறுக்கிட்டுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "முஸ்லிம் சமுதாயத்தில் பின் தங்கியவர்களையும் ஓபிசி பட்டியலில் சேர்க்க வேண்டியது அவசியம்" என்றார். (இ-7)

# ரஜோரி மாவட்ட எல்லையில் பாக்.படைகள் ஆவேச தாக்குதல்

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலம், ரஜோரி மாவட்டத்தில் உள்ள சர்வதேச எல்லைக் கோட்டுப் பகுதியிலுள்ள இந்திய நிலைகளின் மீது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் பாகிஸ்தான் படைகள் நேற்று ஆவேச தாக் குதல் நடத்தின.

நேற்றுக் காலை 8 மணியில் இருந்து அதிநவீன தானியங்கி துப்பாக்கிகள், சிறியரக கைத் துப்பாக்கிகளால் இங்குள்ள இந்திய நிலைகளின் மீது ஆவேச தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் படையினருக்கு இந்திய வீரர்கள் சரியான பதிலடி கொடுத்துள்ளனர் இம்மாதம் 15 நாட்களில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்தியுள்ள ஆறாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத் தக்கது. (இ-3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டுத் தாக்குதலில் ௬௮ குழந்தைகள் பலி!

## உயிரிழப்பு 126 ஆக உயர்வு





(பெய்ரூட்)

**சிரியாவின் அலெப்போ நகர் அருகே பேருந்துகளை குறி வைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 68 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பலி எண்ணிக்கை 126 ஆக உயர்ந்துள்ளது.**

சிரிய்ாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான உள்நாட்டுப்போர், 6 ஆவது ஆண்டாக நீடித்து வருகிறது. கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள அலெப்போ நகரை முழுமையாக விடுவிப்பதற்காக ஜனாதிபதி ஆதரவு படையினர், கடந்த மாதம் மத்தியில் இருந்து அங்கு கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர். போரினால் அங்கிருந்து 80 ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்து விட்டனர்.

இந்நிலையில், அலெப்போ நகரில் இருந்து மக்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பேருந்துகள் மீது நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 100 பேர் உயிரிழந்ததாக கண்காணிப்பு மையம் தெரிவித்து இருந்தது.

கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கமுள்ள ரஷிதீன் என்ற பகுதியில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

முன்னதாக இதே பகுதியில் 5ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அலெப்போ நகரில் இருந்து பேருந்துகள் மூலம் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில், அலெப்போ நகர் அருகே பேருந்துகளை குறி வைத்து நடத்தப்பட்ட இந்த உயிரிழந்தோர் எண்ணிக்கை 126 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களில் 68 பேர் குழந்தைகள் ஆவர்.

கொல்லப்பட்டவர்களில் அதிகமானோர் இட்லிப் மாகாணத்தின் அல்-பவுயா மற்றும் கெப்ரயா கிராமங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்த தாக்குதலுக்கு போப் பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இது ஒரு இழிவான செயல் என்று கூறியுள்ள அவர் பிரச்சினைகள் தீர இறைவனிடம் பிரார்த்தனை செய்வ்தாக தெரிவித்தார். (இ-3)




## ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம்; பொது வாக்கெடுப்பு வெற்றி

(அங்காரா)

துருக்கியில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் தரும் அரசியல் சாசன திருத்தம் மீதான பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக அந்நாட்டின் பிரதமர் பினாலி யெல்டிரிம் அறிவித்துள்ளார்.

துருக்கியில்கடந்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதி திடீரென இராணுவ புரட்சி ஏற்பட்டது. அதை பொதுமக்கள் உதவியுடன் ஜனாதிபதி ரீசெப் தய்யீப் ஏர்துவான் முறியடித்தார். அதைத் தொடர்ந்து 45 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.



அரசு அதிகாரிகள், நீதிபதிகள், இராணுவ வீரர்கள், பொலிஸார் உள்ளிட்டோரும் அதில் அடங்குவர். இராணுவ புரட்சியை தொடர்ந்து துருக்கி அரசியல் சாசனத்தில் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் திருத்தம் செய்ய ஏர்துவான் முடிவு செய்தார். அதைத் தொடர்ந்து அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

அதுகுறித்து பொது மக்களிடம் கருத்து கேட்க நேற்று முன்தினம் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்காக அமைக்கப்பட்ட வாக்கு சாவடிகளில் மக்கள் வாக்களித்த னர்.

இந்நிலையில், அரசியல் சாசன திருத்தம் மீதான பொது வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதாக அந்நாட்டின் பிரதமர் பினாலி யெல்டிரிம் அறிவித்துள்ளார். இந்த வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி முறை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் இது மக்களால் எடுக்கப்பட்ட முடிவு. நமது ஜனநாயக வரலாற்றில் புதிய பக்கம் திறக்கப்பட்டுள்ளது என்றார். (இ-3)

## வருமான வரிக்கணக்கை வெளியிட வலியுறுத்தி ட்ரம்புக்கு எதிராக 150 இடங்களில் பேரணி

## அமெரிக்காவில் வலுக்கிறது போராட்டம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஜனாதிபதி வருமான வரி கணக்கு விபரங்களை வெளியிட வலியுறுத்தி 150 இடங்களில் போராட்டக்காரர்கள் பேரணிகள் நடத்தினர்.

அமெரிக்க நாட்டில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிற வேட்பாளர்கள் வருமான வரி கணக்கு விபரங்களை வெளியிடும் மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால்அதைப்பின்பற்றி, தனது வருமான வரி கணக்கை வெளியிட முடியாது என ஜனாதிபதி தேர்தலின் போது குடியரசு கட்சி வேட்பாளராக களமிறங்கிய டொனால்ட் ட்ரம்ப் கூறி விட்டார்.

இது அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இப்போது அவர் ஜனாதிபதி தேர்தலில்வெற்றி பெற்று, பதவி ஏற்ற நிலையில், கடந்த மாதம் அவரது 2005ஆம் ஆண்டு வருமான வரி கணக்கு விபர அறிக்கையை அமெரிக்காவின் 'எம்.எஸ்.என். பி.சி.'டி.வி. சனல் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது. அதில் ட்ரம்ப் தனது வருமானம்150 மில்லியன் டொலர் (சுமார் ரூ.1,005 கோடி) என கூறி, 38 மில்லியன் டொலர் (சுமார் ரூ.254 கோடி) வருமான வரி செலுத்தியது அம்பலத்துக்கு வந்தது.

இந்த நிலையில்அமெரிக்காவில் ஜனாதிபதி வருமான வரி கணக்கு விபரங்களை வெளியிடும் அவசியம், சட்டபூர்வமாக இல்லை என்ற போதும், ட்ரம்ப் தனது வருமான வரி கணக்கு விபரங்களை அதிகாரபூர்வமாக வெளியிட வேண்டும் என்று குரல் வலுத்து வருகிறது.




இது தொடர்பாக நேற்று முன்தினம்அமெரிக்கா முழுவதும் 150 இடங்களில் போராட்டக்காரர்கள் பேரணிகள் நடத்தினர்.

அங்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான காலக்கெடு நெருங்கிவிட்ட நிலையில், இந்த பேரணிகள் நடந்திருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

பெர்க்லி நகரில் டரம்ப் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இது தொடர்பாக 21 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே ட்ரம்பின் ஆலோசகர், வருமான வரி கணக்கு விபரங்களை வெளியிட வேண்டாம் என ட்ரம்பிடம் தான் எப்போதும் கூறவில்லை என்று கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆற்றுக்குள் பாய்ந்த பேருந்து சீனாவில் பத்துப்பேர் பலி!

(பீஜிங்)

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள குயிஷோவு மாகாணத்தில் உள்ள கையாங்கில் இருந்து வெங்ஊகான் பகுதிக்கு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.



ஆற்று மேம்பாலத்தின் வழியாக சென்றபோது உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 8.30 மணி யளவில் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து ஆற்றுக்குள் பாய்ந்தது.

இந்த கோர விபத்தில் பத்து பயணிகள் பலியானதாகவும் 5 பேர் படுகாயம் அடைந்ததாகவும், 4 பேர் மாயமானதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேருந்து கவிழ்ந்த ஆற்றுப் பகுதியில் மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வேண்டாம்! போப் வேண்டுகோள்

## ஆயுத வியாபாரத்தை நிறுத்துமாறும் வலியுறுத்து





சிரியாவில் நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்என போப்பாண்டவர் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையையொட்டி போப் பாண்டவர் பிரான்சிஸ். வாடிகன் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பு பிரார்த்தனையில் ஈடுபட்டார். இதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதைத்தொடர்ந்து அவர் ஆற்றிய ஈஸ்டர் தின உரையில். அண்மையில் சிரியாவில் விஷ வாயு தாக்குதலில் 100-க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டது குறித்து உருக்கத்துடன் குறிப்பிட்டார். போப் பாண்டவர் பிரான்சிஸ் மேலும் தெரிவிக்கையில்,

போர். பஞ்சம். அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமை ஆகியவற்றால் உலகின் பல நாடுகள் பாதிக்கப்பட்டு உள்ளன. சிரியா நாட்டு மக்கள் மீது தொடர்ந்து பயங்கரம் விதைக்கப்படுகிறது. அவர்கள் மரணத்தை சந்தித்து வருகின்றனர். தப்பியோடிய சிரியா அகதிகள் மீது மிக இழிவான தாக்குதலும் நடத்தப்பட்டு உள்ளது.

இந்த போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். இதேபோல் யேசுநாதர் அவுதரித்த புனித பூமி மற்றும் ஈராக். ஏமன் ஆகிய மத்திய கிழக்கு நாடுகள் அனைத்திலும் அமைதி நிலவிடவேண்டும். உலக நாடுகளின் தலைவர்கள் ஆயுத வியாபாரத்தை கைவிட்டு அமைதியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# ரத்தக் கண்ணீர் சிந்தும் கன்னி மரியாள் சிலை





(பியூனர்ஸ்ஏர்ஸ்)

ஆர்ஜெண்டினாவில் லொஸ் நரான் ஜொஸ் நகரில் வீடொன்றிலுள்ள கன்னி மரியாள் சிலையின் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீர் வடிந்து வருவதாக தகவல் பரவியதையடுத்து அந்த சிலையை பார்க்க பெருமளவான கிறிஸ்தவர்கள் அந்நகருக்கு படையெடுத்த வண் முள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி மரியாள் சிலையின் கண்களிலிருந்து இரத்மம் என நம்பப்படும் சிவப்பு நிறமான திரவம் வடிய ஆரம்பித்ததையடுத்து அந்த சிலையிருந்த வீடு ஒரு வணக்க ஸ்தலமாக மாறியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பிராந்திய திருச்சபையானது மேற்படி மரியாள் சிலை குருதிக் கண்ணீர் சிந்துவது உண்மையிலேயே அற்புதம் தானா என்பதைக் கண்டறிய ஆய்வை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# முதலமைச்சர் விருது, இளம் கலைஞர் விருதுக்கு வடமராட்சி கிழக்கு கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால்விருதுகளுக்காகவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட கலைஞர்கள் இவ் விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்.

முதலமைச்சர் விருது 2017

01.ஆக்க இலக்கியம் (சிறு கதை/நாவல்), 02.கவிதை இலக்கியம் 03.நாடக இலக்கியம் (நாடகங்களின் பனுவல்களை ஆக்கும் கர்த்தா) 04. உரையியல் (கட்டுரையாசிரியர், தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களையும் பொருள் விளக்கங்களையும் எழுதும் படைப்பாளி) 05.வாத்தியக் கலை 06.நடனம் 07.ஓவியம் 08.சிற்பம் 09.கூத்து (வட மோடி, தென் மோடி, காத்தவராயன்) 10.நாடகம் 11.சினிமா (திரைப்படம், குறுந்திரைப்படம்) 12.கிராமியக்கலைகள் 13.வில்லுப் பாட்டு 14. இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு) 15.சொற்பொழிவு 16.புகைப்படம் 17.ஆய்வும் விமர்சனமும் 18.ஊடகம் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம்) 19.ஒப்பனை 20. வாத்திய உருவாக்கம் 21. கைவினைக்கலை (விக்கிரகவார்ப்பு,மற்றும் வார்ப்புக் கலைகளுடன் தொடர்புடையவை, மட்பாண்டம், பன்ன வேலை) 22.இசைநாடகம் போன்ற துறைசார்ந்த 2017. 06.15 அன்று 60 வயதினை பூர்த்தியடைந்த அனைத்துகலைஞர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இளம் கலைஞர் விருது - 2017

01.இலக்கியம் (சிறு கதை/நாவல்) 02.கவிதை இலக்கியம் 03.வாத்தியக் கலை 04.நடனம் 05.ஓவியம் 06.சிற்பம் 07.கூத்து (வடமோடி, தென்மோடி, காத்தவராயன்) 08.நாடகம் (எழுத்துரு, நடிப்பு, நெறியாள்கை) 09.இசை (வாய்ப்பாட்டு,பண்ணிசை, இசையமைப்பு) 10.சினிமா (திரைப்படம், குறுந்திரைப்படம்) 11.புகைப்படம் 12.இசைநாடகம் 13. ஊடகவியல் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம்) போன்ற துறை சார்ந்த 2017.06.15 அன்று 40 வயதிற்கு மேற்படாத அனைத்து கலைஞர்களும் விண்ணப்பிக்க முடியும்.

இவ் இரு விருதுகளிற்கும் விண்ணப்பிக்கும் ஒருவர் பல கலைத்துறைகளிலும் ஈடுபட்டிருந்தாலும் பிரதானமாக எந்தக் கலைத்துறையில் ஈடுபட்டு வருகின்றாரோ அத்துறைக்கே விண்ணப்பிக்க வேண்டும். வயதினை உறுதிப்படுத்தும் வகையில் பிறப்புச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும். கலைச் செயற்பாடுகள் தொடர்பான பொருத்தமான ஆவணங்களுக்கான புகைப்படங்கள், பத்திரிகைச் செய்திகள், நிகழ்வுகளின் இறுவெட்டுக்கள் மற்றும் இதர ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படுவததுடன் கலைஞரது கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் மற்றம் கலைச் செயற்பாடு பற்றிய குறிப்புரை வரைந்து அனுப்புதல் வேண்டும்.

இவற்றிற்கான விண்ணப்பப்படிவங்களினை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று உரிய ஆவணங்களுடன் 30.05. 2017ற்கு முன்னர் ஒப்படைக்குமாறு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 24செவ் 1 இல்
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7201

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா : செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSc, MSc/பொறியியலாளர்
தொ.இ: B/7203

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 62 செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:QS/ஓமான்
தொ.இ: B/7204

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 27 சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/7205

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991RC
நட்சத்திரம்: சதயம்
கி.பா: சூரிசெவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/7202

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 45 சூரிசெவ் 9 இல்
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/7206

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 51 செவ் 8 இல்
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/7210

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/7211

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைக்குள் 100 பேர் புதையுண்டனர்! பலி எண்ணிக்கை 26 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

கொலன்னாவ- மீதோட்ட முல்லவில் கடந்த வெள்ளிக்கிழமை 300 அடி உயரமான குப்பைமேடு வீடுகளுக்கு மேல் சரிந்து வீழ்ந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை, இந்த விபத்தில் 100 பேர் வரையில் தமது வீடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



நேற்று முன்தினம் இரவு இடைநிறுத்தப்பட்ட மீட்புப் பணிகள் நேற்றுக் காலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகளில் இராணுவம், சிறப்பு அதிரடிப்படை உள்ளிட்டவற்றை சேர்ந்த 100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் குப்பைக்குள் புதைந்து போனவர்களை உயிருடன் மீட்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தச்சம்பவத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய சரியான எண்ணிக்கையை உறுதி செய்வதில் அதிகாரிகள் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் 80 வீடுகள் முற்றாகவே குப்பை மேட்டுக்குள் புதைந்துள்ளன. மேலும் 36 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதனிடையே, மீதோட்ட முல்லயில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் இன்னும் 72 மணித்தியாலங்களில் முடிவடையும் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

குப்பைமேட்டில்இன்னொரு சரிவு இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதால், சிறப்பு நிபுணர்கள் குழுவொன்று அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் 30 இற்கு மேற்பட்ட அகழ்வு இயந்திரங்கள்பயன் படுத்தப்படுகின்றன.(இ-7)

# விமான நிலையத்துக்கு அண்மையிலுள்ள காணிகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மித்துள்ள இரண்டு காணிகளை வெளிநாட்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்து ஐந்து நட்சத்திர விடுதிகளை நிர்மாணிக்கும் நோக்கிலேயே இந்தக் காணிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தனியார் நிறுவனங்களுக்கே இந்தக் காணிகள் வழங்கப்படவுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதை அடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சொந்தமான இரண்டு காணிகளை 40 வருட குத்தகைக்கு வழங்க தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமையவே இந்த இரண்டு வெளிநாட்டு நிறுவனங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# கம்பஹாவில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஒரேஇரவில் 300 பேர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களில், ஒரே இரவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளின் போது அறிமுகமில்லாத 265 சந்தேக நபர்களும், நீதிமன்றங்களில் பிடிவிறாந்து விடுக்கப்பட்டிருந்த நிலையில் மறைந்திருந்த 32 பேரும், பாரிய குற்றங்களுடன் நேரடித் தொடர்புடைய மூன்று பேருமாக மொத்தம் 300 சந்தேக நபர்களைக் கைது செய்ய முடிந்ததாக, கம்பஹா பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி முதித்த புஸ்ஸெல்ல தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரியின் விசேட பணிப்பின் பேரில், கம்பஹா பொலிஸ் நிலையம் 17 பேரையும், மினுவாங்கொடை பொலிஸ் நிலையம் 11 பேரையும், மீரிகம பொலிஸ் நிலையம் 27 பேரையும், நிட்டம்புவ பொலிஸ் நிலையம் 11 பேரையும், வெயாங்கொடை பொலிஸ் நிலையம் 15 பேரையும், யக்கல பொலிஸ் நிலையம் 34 பேரையும் கைது செய்துள்ளது.

இதேவேளை, 23 பேர் வெலிவேரிய, 9 பேர் கிரிந்திவெல, 4 பேர் பூகொடை, 27 பேர் கனேமுல்லை, 44 பேர் தொம்பை, 17 பேர் வீரங்குல, 9 பேர் பல்லேவெல, 17 பேர் மல்வத்து ஹிரிபிட்டிய ஆகிய பொலிஸ் நிலையங்களின் ஊடாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாரிய குற்றங்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களை, கம்பஹா மற்றும் கிரிந்திவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீடுகள் மற்றும் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக வெளியிடங்களிலிருந்து வந்திருந்த 265 சந்தேக நபர்களை ஏனைய பிரதேச பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமது ஆள் அடையாளங்களை உறுதி செய்ய முடியாமல் போன மேலும் 32 சந்தேக நபர்களிடமிருந்து விரல் அடையாளங்கள் பெறப்பட்டு, அவர்களின் வசமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பாரிய குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களை, குறித்த பொலிஸ் நிலையங்கள் ஊடாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், கம்பஹா [illegible] பொலிஸ் [illegible] மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### கேட்டுக் கொள்ளக் கூடிய மனநிலை

கணவன் – மனைவி இருவருமே வேலைக்குப் போகிறவர்கள். பிள்ளைகளோ மூன்று. இவை செய்யும் அடமோ பயங்கரம். இதுகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்குள் பிராண அவஸ்தை.

இதனால் காலையில் ஒரே பரபரப்பு. யார் என்ன சிறு தவறு செய்தாலும் மனைவிக்குக் கோபம் கோபமாக வருகிறது. ஹிஸ்டீரியா பேஷண்ட் மாதிரிக் கத்துகிறாள். கணவர் ஒரு நேரம் அமைதியாக இருந்தாலும் மறுநேரம் அவருக்கு கத்துகிறார். விளைவு? சண்டை சச்சரவு வீட்டில் அமைதி இல்லை. இப்படியே காலம் ஓடுகிறது. இதற்கு விடிவே இல்லையா?

இப்படி ஒரு பிரச்சினையை என் நண்பர் ஒருவர் என் காதில் போட்டார்.

ஒரு சிறு நிறுவனம். அதற்கு சுப்பர்வைசர் ஒருவர் ஆர்ப்பாட்டமானவர். பிரச்சினைகளை நளினமாகக் கையாளாமல் முரட்டுத்தனமாகவும் பிடிவாதமாகவும் கையாள்பவர். மேலாலளரோ நேர்மாறானவர். அமைதியைக் கையாள்பவர். இதனால் அலுவலக ஊழியர்களிடையே பல பிரச்சினைகள். சுப்பர்வைசரை மாற்ற வேண்டும் என்று கூப்பாடுகள். மேலாளர் பேச்சுவாக்கில் இதை என்னிடம் சொன்னார்.

துருவித் துருவிச் சில கேள்விகளைக் கேட்டதும் குறிப்பிட்டுள்ள இரண்டுமே என்னைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட ஒரே மாதிரியான பிரச்சினைகள் தாம் என்று முடிவுக்கு வந்தேன்.

இந்த இரண்டிலுமே மிகத் தெளிவாக தெரிய வந்த ஓர் உண்மை. இரு தரப்பாரும் மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்குவராதது தான்.

நீங்கள் செய்வது சரியில்லை ; நீ செய்வது சரியில்லை ; என்று இந்த நான்கு பேரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியபடி காலத்தைக் கடத்தியிருக்கிறார்கள்.

தாங்கள் என்ன நினைக்கிறோம் ; நீங்கள் எப்படி மாற வேண்டும் என்பதையெல்லாம் கூட ஒருவருக்கொருவர் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் முறைப்படி செய்யவில்லை.

அதாவது கேட்டுக் கொள்ளும் மனநிலை சிறிதும் இல்லாத போது தான் மனைவிக்கும் கணவனுக்கும் சுப்பர்வைசருக்கு மேலாளரும் உபதேசம் செய்திருக்கிறார்கள். இந்தப் பழக்கம் சிறிதும் உதவாது என்பதோடு மேற்கொண்டு கெடுதலையே உண்டு பண்ணும்.

ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்டுக் கொள்ளும் மனநிலை வராததற்குப் பல காரணங்கள் உண்டு. சுருக்கமாகச் சொல்வது உத்தரவு போல படும். சற்று நேரம் எடுத்துக் கொண்டு ஆறு அமர விலாவாரியாக சொல்வது நம் உள்ளத்தைத் திறந்து பேசுவதாக பிறருக்கு படும். கேட்டுக் கொள்வார்கள்.

அக்கறையாகச் சொல்ல வேண்டியதை எரிச்சலுடன் சொல்லக் கூடாது. காரணம் எடுபடாது.

எனக்கு எல்லாம் தெரியும் என்கிற மனநிலை உள்ளவர்களுக்கும் பிறர் சொல்வதைக் கேட்டுக் கொள்ளும் மனநிலை இருப்பதில்லை. சில சம்பவங்களில் அவர்களது தவறான முடிவுகளையும் அதனால் ஏற்பட்ட பாதிப்பையும் நாகரிகமாகச் சுட்டிக்காட்டி விட்டால் பிரச்சினை எழாது.

ஒருவர் கோபமாக இருக்கும் போதோ வருத்தமாக இருக்கும் போதோ பிறர் என்ன சொன்னாலும் அது வீண். இந் நேரத்தில் காதில் எதுவுமே ஏறாது.

தமக்குப் பொறுமையாகச் சொல்லும் மனநிலை இருக்கும் போதும் அவர்களுக்கு பொறுமையாகக் கேட்டுக் கொள்ளும் மனநிலை இருக்கும் போதும் மட்டுமே வாயைத் திறப்பது நல்லது.

இதைப் புரிந்து கொள்ளாமல் கரடியாக கத்திக் கொண்டிருப்பது அர்த்தமற்றது.

**லேனா தமிழ்வாணன்**

# அனர்த்தம் குறித்து ஐந்து நாட்களுக்குள் அறிக்கை வேண்டும்

## ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

மீதோட்டமுல்ல குப்பை மேட்டின் ஒருபகுதி இடிந்து வீழ்ந்தமையால் அனர்த்தத் திற்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் சேதமடைந்த சொத்துக்கள் பற்றிய கணிப்பீடுகளையும். மதிப்பீடுகளையும் மேற்கொ ண்டு அது தொடர்பான அறிக் கைகய ஐந்து தினங்களுக் குள் சமர்ப்பிக்கவேண்டு மென ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அதிகாரிகளு க்கு உத்தரவிட்டுள்ளார்.

மீதோட்ட முல்லையில் குப்பைமேடு இடிந்து வீழ்ந் தமையால் ஏற்பட்ட அன ர்த்தத்திற்கு உள்ளான மக் களுக்கு உதவி வழங்குதல் தொடர்பான கலந்துரை யாடல் நேற்று முன்தினம் முற்பகல் இடர் முகாமை த்துவ அமைச்சில் நடைபெ ற்றது.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்.

மீதோட்டமுல்ல பகுதி யில் தற்போது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மக்களை அந்த பிரதேசத்திலிருந்து அகற்றி அவர்களை பாது காப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கை களை துரிதப்படுத்த வேண் டும் எனவும் உத்தரவிட் டார். (இ-7)




# அனர்த்தம்; அழிவு; எச்சம்!





## இதுவே நாட்டில் மிச்சம்







கொலன்னாவ மீதோட்டமுல்லயில் கடந்த 14 ஆம் திகதி குப்பைமேடு வீடுகளுக்கு மேல் சரிந்து விழுந்த விபத்தில் மீட்புப் பணிகளில் இராணு வம், சிறப்பு அதிரடிப்படை உள் ளிட்டவற்றைச் சேர்ந்த 100 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் 80 வீடுகள் முற்றாக குப்பை மேட்டுக்குள் புதைந் துள்ளன. மேலும் 36 வீடுகள் பலத்த சேமடைந்துள்ளன.

மீட்புப் பணிகளில் 30 இற்கு மேற்பட்ட அகழ்வு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குப்பைகள் குறித்துக்கூட திட்டம் இல்லாதமையே அனர்த்தத்திற்கு காரணம்



## டக்ளஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

எமது நாட்டில் குப்பைகளை அகற்றுவது தொடர்பில் கூட ஒரு கொள்கைத் திட்டம் இல்லாமையே மீதோட்டமுல்ல குப்பை மேடு அனர்த்தத்திற்குக் காரணமாகும். இவ்வாறான செயற்கைத்தனமாக மக்கள்மீது புகுத்தப்படுகின்ற அனர்த்தங்களை முன்கூட்டியே தவிர்த்துக் கொள்வதன் ஊடாக பல உயிர்களை காப்பாற்றக்கூடிய வாய்ப்புகளிலிருந்தும், இத்தகையதொரு அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் ஆளுக்காள் விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டு பொறுப்புகளிலிருந்து நழுவிவிடுவது முறையல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மீதோட்டமுல்ல குப்பை மேடு அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களது குடும்பத்தினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டுள்ள அவர், பாதிக்கப்பட்ட அனைவரும் இயல்பு நிலைக்குத் திரும்ப அனைத்து உதவிகளும் உடனடியாக அரசால் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வனர்த்தம் குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள டக்ளஸ்தேவானந்தா மீதோட்டமுல்ல குப்பை மேட்டை அகற்ற வேண்டுமெனக் கோரி ஏற்கனவே மக்கள் போராட்டங்கள் பல வெகு எழுச்சியாகவே நடத்தப்பட்டன. எனினும், இதனைக் கண்டு கொள்ளாத உரிய தரப்பினர்களின் அலட்சியப் போக்கு காரணமாகவே இன்று இந்த பாரிய அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இது, தெரிந்தே ஏற்படுத்தப் பட்ட செயற்கையான அனர்த்தமாகும். ஒரு பகுதியின் குடியிருப்புகள், மண்ணின்தன்மை, சூழல், நிலத்தடி நீர் வளத் தன்மைகள் போன்றவை கருத்தில் கொள்ளப் படாமல், தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்படுகின்ற இத்தகைய நடவடிக்கைகளே மக்களுக்கும், சூழலுக்கும் பாதிப்புகளை கொண்டு தரக்கூடியன என்பதை உரிய தரப்பினர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். இதனையே இந்த அனர்த்தம் இன்று உணர்த்துகின்றது.

ஏற்படுகின்ற அனர்த்தங்கள், அழிவுகளிலிருந்து பாடங்களைக்கற்றுக் கொள்ளாமல் மீண்டும், மீண்டும் அதே தவறுகளை இழைத்து வருதல் காரணமாகவே நாம் தொடர்ந்தும் பல அழிவுகளுக்கு முகங் கொடுத்து வருகின்றோம்.

இது பொதுவாகவே, அனைத்துத் துறைகள் சார்ந்தும் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம். அந்த வகையில், மேற்படி குப்பை மேட்டை அகற்றுவதற்கும்,

அதனை வேறொரு மக்கள் குடியிருப்பு சார்ந்த பகுதியில் மீண்டும் கொண்டு கொட்டாமல், மீள்சுழற்சி முறைமைகளுக்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். அதேபோன்று, இன்று மலையகப் பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் குப்பை தொடர்பிலான பிரச்சினைகளுக்கு மக்கள் முகங் கொடுத்து வருகின்றனர்.

அவற்றுக்கும் உடனடித் தீர்வுகள் காணப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தாமதமின்றிய நிவாரணங்கள் வழங்கப்படவும், பரிகாரங்கள் காணப்படவும் வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## குப்பை மேட்டில் வெள்ளைக்கொடி



மீதோட்டமுல்ல குப்பை மேடு சரிந்ததில் இதுவரையில் 26 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், துக்க சம்பவத்தை ஒட்டி, குப்பை மேட்டில் வெள்ளைக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உறவுகள் அல்லலுறும் நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளது.

அத்துடன், குறித்த பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த அனர்த்தம் காரணமாக சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1047

Search for people, places and things · Nagendram · Home

சிவன்




சுஜா




வர்ணன்




கலை




சனோ




வேணு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறை மாவட்ட தமிழர்கள் ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

மாத்தறை மாவட்டத்தில் தமிழர் செறிவாக வாழும் கிராம அதிகாரி பிரிவுகளை நோக்கின் கொட்டப்பொல பிரதேச செமலகல் பிரிவிலுள்ள கண்டிலிப்பான கிராம அதிகாரி பிரிவில் தமிழர் 75%மாக இருக்கின்றனர்.

இப் பிரதேச செயலகப் பிரிவில் அடங்கும் விகாரஹென, அடரதெனிய, தெனிப்பிட்டிய பிரிவுகளில் தமிழர் 50%த்திற்கு மேலுள்ளனர். இப் பிரிவுகளை மையமாக வைத்து கொட்டபொலப் பிரதேச சபைக்கு, கண்டிப்பான ஒரு வட்டாரமாகவும் தெனிப்பிட்டிய இரு அங்கத்தவர்களை தெரிவு செய்தும் வட்டாரங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. கிராம அதிகாரி பிரிவு மட்டத்தில் தமிழர்கள் 20-30%த்திற்கு இடையில் 9 பிரிவுகளிலும் 10-20% இடைப்பட்ட நிலையில் 16 பிரிவுகளிலும் 5-10%த்திற்கு இடைப்பட்ட நிலையில் 20 பிரிவுகளிலும் இருப்பதாக தெரிகின்றது.

கொட்டப் பொலப் பிரதேச செயலகப் பிரிவில் தமிழர்கள் 10%த்திற்கு மேல் வாழும் கிராம அதிகாரி பிரிவுகள் பின்வருமாறு, கண்டிலப்பன (75%), விகாஹென(57%), அடரதெனியா(51%), தெனிப்பிட்டிய (50%), நிசங்கபுர (29%), கொலவினிகம(24%) புசல்லாவ (18%), கிரிவல்கொட (16%), பள்ளேகம(15%), கொட்டப்பொல(14%), கொஸ்மோதர( 14%), கொற கொல்ல மேற்கு(14%), நடக்கந்த (13%)

பிற்றப்பத்தற பிரதேச செயலகப்பிரிவில் தமிழர்கள் 10 %த்திற்கு மேல் வாழும் கிராம அதிகாரிகள் பிரிவு பின்வருமாறு, ரம்புக்தன மேற்கு (28%), தலம்பே கும்பற (25%), வெலிவ (24%), தென்னஹென்ன(21%), கொஸ்நில் கொட (16%), பங்கால கிழக்கு (15%), பங்கால மேற்கு (15%), கொறக்காவில (13%), தங்கொழுவ (13%), வன சிங்க கந்த(10%)

பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவில் தமிழர்கள் வாழும் முக்கிய கிராம அதிகாரி பிரிவுகள் பின்வருமாறு, பட்டன்நுற தெற்கு (20%), கிரிலிபன(29%), மறவல (20%)

அக்குரஸ்ஸப்பிரிவில் தமிழர்கள் வாழும் முக்கிய கிராம அதிகாரி பிரிவுகள் - லெனமா வடக்கு (43%), ஹலந்தாவ (19%) மற்றும் மறமா வடக்கு, அக்குரஸ்ஸ, தியலப்பவ பிரிவுகளில் சிறியளவில் இயங்கி வருகின்றனர்.

முலற்றியான பிரதேச செயலகப்பிரிவில் டெனிப் பொத்த (18%) கிராம அதிகாரி பிரிவிலும் அத்துலிய பிரதேச செயலகப் பிரிவில் கப்பே (20%) கிராம அதிகாரி பிரிவிலும் ஹக்மனை பிரதேச செயலகப் பிரிவில் படாவத்த (9%) கிராம அதிகாரி பிரிவிலும் தமிழர்கள் குறிப்பிடத்தக்களவு இருக்கின்றனர். மாத்தறை , வெலிகம நகர்களில் சிறியளவு எண்ணிக்கையில் தமிழர்கள் இருக்கின்றனர்.

சோனகமக்கள் குறிப்பிட்ட சில கிராமங்களில் மிகவும் செறிவாக வாழ்கின்றனர். அத்துரலிய பிரிவில் கோடப்பிட்டி அதிகாரி பிரிவிலும் (98%), வெலிப்பிட்டிய பிரிவில் வெலிப்பிட்டிய (82%), மடுறகொட(90%), கப்புவத்தை (88%) கிராம அதிகாரி பிரிவுகளிலும் ஹக்மனப் பிரிவில் மீ எல்லவிலும் (57%), வெலிகம நகரில் கெற்றி வீதி (44%), அளுத்வீதி (88%), பிரிவுகளிலும், மாத்தறை நகரில் கடைவீதி தெற்கு (84%), கொட்வேகொட எலியகந்த தெற்கு (53%), வடக்கு (46%), கடைவீதி தெற்கு (84%), உயன்வதை (32%)யிலும் கிரிந்த புகுவெலப் பிரிவில் கிரிந்த கீழ்ப் பகுதி பிரிவிலும் (68%) , தெவிநுவர பிரிவில் காந்தாரகிழக்கு (32%), வலல பிரிவுகளிலும் திக்குவெல்ல பிரிவில் ஜோனகபுர கிழக்கு (87%), ஜோனகபுர மேற்கு (100%), பத்தேகம (29%) ஆகிய பிரிவுகளில் இவர்கள் செறிவாக வாழ்கிறார்கள். தமிழர்கள் மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் செறிவாக இருக்க சோனகர்கள் மாவட்டத்தின் தென் கரையோரப் பகுதிகளில் செறிவாக உள்ளனர்.

மாத்தறை மாவட்டத் தமிழர்களில் 75% மேற்பட்டோர் இந்துக்களாவர். 1971 இல் தமிழரில் 86.42% இருந்த இந்துக்கள், 1981 இல் 86.09% மாகக் குறைந்து 2001 இல் 86.78% மாக மாறி 2012 இல் 76.60% மாகக் குறைவடைந்துள்ளனர். மத மாற்றமே இக் குறைவடைவதற்குக் காரணம். இந்துக்களாக இருந்தவர்களில் ஒரு பகுதியினர் காலி கத்தோலிக்க மாவட்டத்தின் கீழ் செயற்படும் தோட்ட சமூக அபிவிருத்தி (CODE SEP) சபையின் சேவையின் தாக்கமாக கருதப்படுகின்றது. தற்பொழுது மாத்தறை மாவட்ட தமிழர்களில் 25% த்தினர் கத்தோலிக்க / கிறிஸ்தவ சமயங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழும் தோட்டப் பகுதிகளிலும், தெனியாய நகர்ப்பகுதியிலும் இந்து ஆலயங்கள் பல இருக்கின்றன. கதிரேசன் ஆலயம் , என்சல்வத்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வேர்வழி தோட்டநிர்த்தா கலப் பிரிவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், அனிக்கந்த தோட்ட ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம், தங்கொலுவதோட்ட பிற்றப் பத்தற ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், விகாரஹென் ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயம் ஆகியன இந்து சமய அமைச்சில் பதிவு செய்த ஆலயங்களாகும். இப் பெரிய இந்து ஆலயங்களைத் தவிர பல சிறுசிறு இந்து வழிபாட்டு தலங்கள் தோட்டம் தோறும் காணப்படுகின்றன. தெனியாயப் பகுதி இந்து ஆலயங்களில் பூசைகள், திருவிழாக்கள் ஒழுங்காக இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

தெனியாவில் கத்தோலிக்க தேவாலயமும் இலங்கைத் திருச்சபையில் புனித லூக்ஸ் தேவாலயம் உள்ளன. இவ்விரு தேவாலயங்களில் தமிழ் அருட்தந்தையர்களும் போதர்களும் கடமையாற்றுகின்றனர். தமிழில் தேவாலய வணக்க செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தெனியாய கத்தோலிக்க தேவாலய சூழலிலேயே கொடே செப்பின் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறுகின் றன. இந்நிறுவனம் ஏழைகள் பாதிப்புக்குள்ளாகக் கூடியவர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுவதுடன் சமூக அமைப்புக்களை விருத்தி செய்வதிலும் பலப்படுத்துவதி லும் மக்களையும் சமூகத்தை யும் வலுப்படுத்துவதிலும் மக்களின் சமூக-தொழில் நுட்ப ஆற் றலை மேம்படுத்துவதிலும் சமூக திட்டங்களின் நிலைபேறு தன்மை காப்பதிலும் முன் னின்று உழைக்கின்றது. இந்த நிறுவனத்தின் செயற்பாட்டால் காலி, மாத்தறை பெருந்தோட்ட தமிழ் மக்க்ள் பல நன்மையடைந்துள்ளார்கள்.

மாத்தறை மாவட்டத்தில் 16 தமிழ் மொழிப் பாடசாலைகளும் 3 சிங்களம்/தமிழ் இருமொழிப்பாட சாலைகளும் ஒரு ஆங்கிலம்/தமிழ் மொழிப்பாடசாலைகளும் இருக்கின்றன. மொத்தம் 20 பாடசாலைகளில் 13 பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாகவும் 5 தமிழ் பாடசாலைகளாகவும் 2 சிங்கள/தமிழ் பாடசாலைகளாக இருக்கின்றன. வெலிகம அரபா மகா வித்தியாலயம் 1AB பாடசாலையாக இருப்பதுடன் இங்கு தமிழ்/ஆங்கிலப் பிரிவுகள் இருக்கின்றன.

மாத்தறை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு 7355 மாணவர்கள் தமிழ் மொழி மூலம் கல்வி பயின்றனர். இவர்கள் மாணவர் எண்ணிக்கை 3662 ஆகவும் மாணவிகளின் எண்ணிக்கை 3693 பேராகவும் இருந்தது.

மாத்தறை மாவட்ட தமிழ் பாடசாலைகள் மொறவக்க கல்வி வலயத்திலேயே அமைந்துள்ளன. இவை முன்னர் பல தோட்டப் பாடசாலைகளாக இருந்து பின்னர் அரசாங்கத்தால் கையப்படுத்தப்பட்டு வளர்ந்து வரும் பாடசாலைகளாகும். தமிழ் பாடசாலைகள் பின்வருமாறு

I. தெனியாய புனித மத்தியூ பாடசாலை

II. ஹன்போர்ட் தமிழ் பாடசாலை

III. அனிக்கந்த தமிழ் பாடசாலை

IV. என்சல்வத்த தமிழ் பாடசாலை

VI. உலந்தாவ தமிழ் பாடசாலை

மொறவக்க கல்வி வலய தமிழ் பாடசாலைகள் மிகவும் கீழ்நிலையிலிருந்து அண்மைக் காலத் தில் சிறிது முன்னேற்றம் கண்டுள்ளன. கொட்டக்கல கல்வியியல் டிப்ளோமா தாரிகள் மற்றும் பட்டதாரிகள் ஆசிரிய சேவையில்அண்மையில்இணைந்துள்ளனர். கெடேசெப்பின் முயற்சிகள் உதவியுடன் ஒரு காலத்தில் 27 தொண்டர் ஆசிரியர்கள் இப்பாடசாலைகளில் கடமையாற்றினர். இத்தொண்டர் ஆசிரியர்களுள் ஒரு பகுதியினர் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர். மொறவக்க கல்வி வலயத்தில் இன்று க.பொ.த சா/த, க.பொ.த உ/த கற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. உயர்தர வகுப்புக்களில் இன்றும் விஞ்ஞானம், கணிதம் பயிலும் வாய்ப்புகள் கிட்டவில்லை. 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வருடா வருடம் ஓரிரு மாணவர்கள் சித்தியடையத் தொடங்கியுள்ளனர்.

மொறவக்க கல்வி வலயத்தில் தமிழ் மொழி மூலம் பாடசாலைக்கல்வியில் சிறிதளவு முன்னேற்றம் கண்டுள்ளது. மாத்தறை மாவட்ட தமிழ் பிள்ளைகளில் 90% மேற்பட்டோர் இக்கல்வி வலயத்துக்குள் வருகின்றனர்.

மொறவக்க கல்வி வலயத்துக்கு வெளியில் தமிழ்மொழிப் பாடசாலைகள் இல்லை. தமிழ் பிள்ளைகள் முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஒரு பகுதி தமிழ் மாணவர்கள் முஸ்லிம் பாடசாலைகளில் தமிழில் படிக்கின்றனர். இன் னொரு பிரிவினர் சிங்களப் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்

மாத்தறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் பட்டியலில் காட்டப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகள்

1. மின்காந் தேசியப் பாடசாலை, திக்குவெல்ல -மாத்தறை

2. மின்காந் கனிஷ்ட பாடசாலை ஜோனகபுர திக்க வெல்ல

3. அல்அசார் வித்தியாலயம் காந்தார மாத்தறை

4. அல் குடா முஸ்லிம் வித்தியாலயம் தெலிச்சுவெல அக்குரஸ்ஸ

5. அல்முனா மகா வித்தியாலயம் ஹக்மன முலற்றியான

6. அசப்பா கனிஸ்ட வித்தியாலயம் தெனிப்பிட்டிய வெலிகம

7. டார்உளும் மகாவித்தியாலயம் - மாத்தறை

8. இல்மா வித்தியாலயம் - கொட்டுகெடை

9.கிரிந்த முஸ்லிம்பாடசாலை - கிரிந்தபுகுவெல, ஹக்மன

10. சடத் மகாவித்தியாலயம் கோடாப்பிட்டிய அக்குரஸ்ஸ

11. வெலிகம அல்தூர் முஸ்லிம் பாடசாலை

12. சகிரா மகா வித்தியாலயம் வெலிப்பிட்டிய வெலிகம

13.அரபா மத்திய கல்லூரி-வெலிகம

கொட்டப்பொல பிற்றப்பத்திர பஸ்கொட மற்றும் அக்குரஸ்ஸ வட பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் மொழி, சமயம், கலாசாரத்தை அழிய விடாது ஓரளவு பேணி வருகின்றார்கள் . மொறவக்க பிரதேச தமிழ் பெண்களில் தமிழ் கலாசார அம்சம் வெளிப்படுவது போல மொற வக்க தமிழ் ஆண்களில் வெளிப்படுவது குறைவு. இவர்களின் நடை உடை மற்றும் முகத் தோற்றம் சிங்களச் சாயலைப் பெற்று வருகின்றது. மேலும் இவர்கள் இரு மொழிகளையும் பேசும் ஆற்றலையும் பெற்று இருக்கின்றனர்.

இளையவர்கள் சிங்களச் சுதேசிகள் போல சிங்கள உச்சரிப்பை பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றுக்கின்றனர். முதியவர்களின் சிங்கள உச்சரிப்பில் இவர் தமிழர் என அறிய முடியும்.

தோட்டங்களில் பாரம்பரிய தமிழ் கூத்துக்கள், சமய சடங்குகள் இடம் பெறுகின்றன. காமன் கூத்து மாடசாமி சமய - பண்பாட்டு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. வானொலி, தொலைக்காட்சிப் பாவனை தோட்ட மக்களுக்கு கிட்டியுள்ளதால் தமிழ் நாடகங்கள் பார்க்கும் பண்பு அதிகரித்ததுடன் தமிழ் மொழிப் பாவனையும் அதிகரிக்கின்றது.

மேலும் தோட்ட மக்கள், பொருளாதார ரீதியில் வலுப் பெற, தமிழ் நாட்டுக்கு போய் விடும் சந்தர்ப்பம் கூடுதலாகிக் கொண்டு வருகின்றது. இவர்களது தமிழ் நாட்டுப் பயணங்கள் மூலம் தங்களின் கலாரர வேர்களை மீளவும் இனங்காண வழிவகுத்துள்ளது.

மாத்தறை மாவட்ட தமிழ் மக்கள் அங்கு சிறுபான்மையினராகவும் பொருளாதார ரீதியில் குறைந்தவர்களாகவும் அரசியல் ரீதியில் வலுவற்றவர்களாகவும், அடக்குமுறைகளாலும், பலமுறை இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட வர்களாக இருந்த பொழுதும் இன்னமும் தமிழர்களாகவும் தமிழ் பண்பாட்டைக்கடைப் பிடித்து வாழ்பவர்களாக இருப்பதும் எமக்கு மன நிறைவும் பெருமையுமாக இருக்கின்றது. (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையும் தாதியர் பற்றாக்குறையும்



வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி
பணிப்பாளர்.
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை

➢ தாதியர்களுக்கான போதியளவு விடுதி வசதி இல்லாதிருத்தல். தற்போது போதனா வைத்தியசாலையில் 60 இற்கும் மேற்பட்ட தாதியர்கள் தங்கக் கூடிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

➢ தாதியர்கள் ஒப்பீட்டளவில் இருவேளை கடமை (double duty) செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றமை.

➢ ஒருவர் கடமைக்கு வராத பட்சத்தில் தொடர்ச்சியாக 24 மணி நேரத்திலும் அதிகமாக கடமை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றமை.



➢ அவசர விடுப்பு (லீவு) எடுக்க முடியர்திருக்கின்றமை.

➢ பிள்ளைகள் குடும்பத்தினரை பராமரிக்க முடியாதிருத்தல்.

தாதியர் பற்றாக்குறையால் வைத்தியசாலை எதிர்நோக்கும் சவால்

➢ தாதியர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் 50 சதவீத சத்திரசிகிச்சைக் கூடமே பயன்படுத்தப்படுகின்றது. போதியளவு சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருக்கின்றார்கள். மருத்துவ உபகரணங்கள் இருக்கின்றன, ஆய்வுகூட வசதி இருக்கின்றது. இருப்பினும் தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் சத்திர சிகிச்சைக் கூடத்தினை முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது.

➢ அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள 22 படுக்கைகளில் (ICU BEDS)13 கட்டில்கள் மட்டுமே தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

➢ பல சத்திரகிச்சைகள், மருத்துவப் பரிசோதனைகள் பிற்போடப்படுகின்ற நிலைமை.

➢ மருத்துவ விடுதிகளில் அதிகரித்துவரும் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை வழங்கி பராமரிக்க முடியாமை.

➢ புதிதாக சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிக்க முடியாதிருத்தல்

தாதியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு என்ன செய்யலாம்?

➢ வடபகுதி மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு பிரதேச, மாவட்ட கோட்டா அடிப்படையில் தாதிய மாணவரகளை சேர்த்துக் கொள்ளல்.

➢ க.பொ.த (உ/த) இல் கணித, விஞ்ஞான பிரிவு தவிர்ந்த வர்த்தக மற்றும் கலைப்பிரிவு மாணவர்களை தாதிய பயிற்சியில் சேர்ப்பதற்கு உரிய அழுத்தங்களை மக்கள் பிரதிநிதிகள் கொடுத்தல் வேண்டும்.

➢ தாதிய நியமனம் வழங்கப்படுகின்ற போது யாழ்.போதனா வைத்தியசாலை வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னுரிமை வழங்க மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்தல்.

➢ க.பொ.த (உ/த) கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கு அதிகளவான மாணவர்களை உள்வாங்கத் தக்க வகையில் மாணவர்களை க.பொ.த (சா.த) கற்கின்ற போதே ஊக்குவித்தல். தாதிய சேவைக்கு 95 சத்வீதம் பெண்கள் தெரிவு செய்யப்படுவதால் அதிகளவு மாணவிகளை கணித, விஞ்ஞான பிரிவுகளில் கல்வி கற்க ஊக்குவித்தல்.

இதேவேளை தாதிய சேவை மட்டுமன்றி ஏனைய துணை மருத்துவ சேவைகளான எக்ஸ் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர், முதலான துணை மருத்துவ சேவைகளுக்கும் கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களே தெரிவு செய்யப்படுவதால் க.பொ.த(உ/த) இல் கணித,விஞ்ஞான பிரிவுகளில் அதிகளவான மாணவர்களை உள்வாங்கத் தக்க வகையில் திட்டமிட்ட கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

வடமாகாண மாணவர்களின் கடந்த 5 வருட புள்ளி விபரங்களை எடுத்து நோக்குகையில் க.பொ.த(உ/த) இல் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானப் பிரிவுக்கு தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படுவதை அவதானிக்கலாம். அதே வேளை கடந்த 2012 முதல் 2016 வரை க.பொ.த(சா/த) பெறுபேறுகளின் அடிப்படையில் வடபகுதி கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இது வடபகுதியின் அனைத்துத்துறைகளிலும் வேலை வாய்ப்புக்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தும். வட மாகாண மாணவர்களின் கல்வித்தரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் குறிப்பாக கல்விப்புலத்தைச் சேர்ந்தவர்கள் கூடிய அக்கறை காண்பிக்க வேண்டும். இதுவே தாதிய சேவை மட்டுமன்றி ஏனைய துறைகளுக்கும் வடபகுதி மாணவர்களை அதிகளவு உள்ளீர்க்க வாய்ப்பாக அமையும். (முற்றும்)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சி.ரி.ஸ்கான் இன்றி நோயாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சி.ரி. ஸ்கான் இன்றி நோயாளர்கள் அவதிப்படுவதாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஏனைய வைத்தியசாலைகளில் இல்லாத இரு பெரும் பிரிவுகளான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு. உளநல சிகிச்சைப் பிரிவு ஆகிய சிறப்பு அலகுகள் உள்ளன. யாழ்.பல்கலைக்கழகத்தின் போதனா பிரிவுகளாகவும் இந்த இரு அலகுகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து ஒரு நாளைக்கு 25 இற்கும் மேற்பட்ட புற்றுநோயாளர்கள் சி.ரி. ஸ்கான் எடுப்பதற்காக அம்புலன்ஸ் வாகனம் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். யாழ். போதனா வைத்தியசாலையிலும் ஒரு சி.ரி. ஸ்கான் மட்டும் உள்ளமையால் அந்த ஸ்கான் பெரும்பாலான காலங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படு கின்றமையால் இந்த நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலைக்கோ அன்றி அநுராதபுரம் வைத்தியசாலைக்கோ கொண்டு செல்லப்படுகின்றனர்.

சில நோயாளர்கள் சி.ரி. ஸ்கான் எடுப்பதற்குக் கொண்டு செல்லப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மரணிக்கின்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதனைவிட, புற்றுநோய் தவிர்ந்த ஏனைய மருத்துவ விடுதிகள், உளநல நோயாளர்களும் இவ்வாறு சி.ரீ. ஸ்கானுக்காகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றமை வழக்கம்.

அத்துடன், அம்புலன்ஸ் சேவைகளும் இங்கு போதியனவாக இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. சில புற்றுநோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக மகரகமவுக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. சி.ரி. ஸ்கானுக்காக யாழ். போதனா வைத்தியசாலை, வவுனியா சிலவேளை அநுராதபுரம் வரை செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இதனால் அம்புலன்ஸ் சேவை நோயாளருக்குத் தேவை ஏற்படுகின்ற உரிய நேரத்தில் கிடைக்காமையால் நோயாளர்கள் அவதியுறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, தற்போது மத்திய சுகாதார அமைச்சால் வடமாகாணத்துக்கு என்று சி.ரி.ஸ்கான் ஒன்று வழங்கப்பட இருப்பதாக கடந்த வாரம் எமது வைத்தியசாலைக்கு வருகை தந்த மத்திய சுகாதார அமைச்சருடனான கலந்துரையாடல் மூலம் அறியக்கிடக்கின்றது. அந்த இயந்திரம், வட மாகாணத்தில் முக்கிய நோயாளர் சேவையை ஆற்றுகின்ற மீள்குடியேற்றப் பிரதேசத்தில் அமைந்துள்ள அதி சிறப்புவாய்ந்த தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை விடுத்து. வேறு ஒரு வைத்தியசாலைக்கு வழங்கப்பட உள்ளதாக அறியமுடிகின்றது. இந்த விடயத்தில் வடக்கு மாகாணசபை உரிய நிலைப்பாட்டை எடுத்து மக்கள் நலன் கருதிச் செயற்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# திருமலையிலிருந்து வவுனியா வருகை

அறுபது வயதுக்கு மேற்பட்ட சகல இலங்கைப் பிரஜைகளிற்கும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி துவிச்சக்கரவண் டியில் இலங்கையை சுற்றி வரும் தர்மலிங்கம் பிரதாபன் ஆரம்பித்த இடத்தில் இன்று மாலை 4.30 மணியளவில் பயணத்தை நிறைவு செய்யவுள்ளார்.




கடந்த 08.04.2017 அன்று வவுனியா நகரில் இருந்து புறப்பட்ட இவர் இலங்கையின் கரையோரப்பகுதியாக வலம் வந்து தனது 10ஆம் நாள் பயணத்தை நேற்று திருகோணமலை நகரில் இருந்து ஆரம்பித்தார். அவர் 1515 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து இன்று பதினொராம்நாள் நிறைவில் வவுனியா நகரை வந்தடைவார். அவருக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# வியட்நாம், இலங்கை-பிரதமர்கள் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை

## வர்த்தக உறவை அதிகரிக்க நடவடிக்கை

வியட்நாமுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் அந்நாட்டின் பிரதமர் குயன் குவான் பூவின் உள்ளிட்ட அந்நாட்டு தலைவர்களுக்குமிடையில் இருதரப்பு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தையின்போது இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளை எதிர்வரும் சில வருடங்களில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## கற்பனைக் கோட்டை



ஒரு ஊரில் சுந்தரம் என்று ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் விஜயா. அவர்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெயர் ரங்கன். இருவரும் மிகுந்த ஏழை. ஆனாலும் வெட்டிக் கதை பேசுவதில் வல்லவர்கள். கனவுலகத்திலேயே சஞ்சரிப்பவர்கள். உடைமை என்று சொல்லிக் கொள்ள அவர்களிடம் சில சட்டி, பானைகள் தானிருந்தன. ஆனாலும் தினசரி என்ன வியாபாரம் செய்யலாம். என்ன தொழில் செய்யலாமென்று கணவனும், மனைவியும் பேசிக் கொண்டே இருப்பர். ஏதாவது ஒரு தொழில் செய்யலாமென்று தீர்மானிப்பர். உடனே அந்த தொழில் எப்படி விருத்தியாகிறது. எவ்வளவு இலாபம் கிடைக்கிறது. தாங்கள் என்னென்ன சுகம் அனுபவிப்பது என்றெல்லாம் வாய் கிழியப் பேசி பொழுதை கழிப்பர்.

அதை எல்லாம் அடுத்த வீட்டு ரங்கன் கேட்டுக்கொண்டே இருப்பார். அவருக்கு சிரிப்பு வரும். வெறும் கையால் முழம் போடுகிறார்களே பாவம் என்று எண்ணுவார். ஒரு நாள் கணவன், மனைவி இருவரும் பால் வியாபாரம் செய்வதைப் பற்றி பேச ஆரம்பித்தனர். "என்னிடம் பணமிருந்தால் பசுக்கள் வாங்குவேன்?" என்றான் சுந்தரம் "பசுக்களை மேய்ச்சல் தரைக்கு ஓட்டிப் போய் மேய விடுவேன். அங்கே அவைகள் போடும் சாணத்தை கூடையில் எடுத்து வந்து நம் வீட்டுச் சுவற்றில் வரட்டி தட்டுவேன். அவைகளை விற்று காசு சேர்ப்பேன்!" என்றாள் விஜயா.

"நான் என்ன செய்வேன் தெரியுமா விஜயா? கறந்த பாலைக் கொண்டு போய் விற்று காசாக்குவேன்!" என்றான் சுந்தரம். "விற்காது மீதமான பாலை காய்ச்சி அதை தயிராக்குவேன். தயிரைக் கடைவேன் வெண்ணெய் கிடைக்கும். வெண்ணெயை காய்ச்சுவேன். நெய் கிடைக்கும், தயிர், மோர், வெண்ணெய், நெய் எல்லாம் கூடையில் எடுத்துக் கொண்டு தெருத் தெருவாக போய் விற்பேன். விற்றுக் காசாக்குவேன். காசை பணமாக்குவேன்" எனக்கு அவ்வளவு திறமை இருக்கு தெரியுமா? என்றாள் விஜயா. "அப்படி செய்தும் பால், தயிர், வெண்ணெய், நெய் மிச்சமாகி விட்டால் என்ன செய்வது?" என்று கவலைப்பட்டான் சுந்தரம். "இதற்காக கவலைப்படுவார்களா என்ன? நாலு வீடு தள்ளித்தானே என் தங்கை குழந்தை குட்டிகளோடு இருக்கிறாள். அவளுக்கு கொடுத்து விடுவேன்!" என்றாள் விஜயா. அதைக் கேட்டதும் கோபம் பொத்துக் கொண்டது. "நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறவைகளை உன் தங்கைக்கும், குழந்தைகளுக்கும் கொண்டு போய் கொடுப்பாயா? அவைகளை நீ கொண்டு போய் கொடுக்காதபடி செய்து விடுகிறேன் பார்!" என்று கத்தியபடி வீட்டிலிருக்கிற நான்கு பானைகளை தயிர், மோர், வெண்ணெய், நெய் இருப்பதாக நினைத்துக் கொண்டு எல்லாப் பானைகளையும் உடைத்து விட்டான் சுந்தரம்,

இவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார் பக்கத்து வீட்டு ராங்கன். பகல் கனவு கண்டு கடைசியில் தம் கைப் பொருளை இழக்கும் இருவருக்கும் புத்தி வர ஏதாவது செய்ய வேண்டும் என்றெண்ணினார். சுந்தரம் வீட்டினுள் நுழைந்தார். அங்கு மூலையில் சார்த்தி வைத்திருந்த ஒரு கோலை எடுத்து வெறும் வெளியில் அப்படி இப்படி வீசி, "ஹை ஹை" என்று விரட்டினார்.

"ராங்கா...! எதை விரட்டுகிறீர்கள்?" என்றான் சுந்தரம்.

"உன் பசு என் தோட்டத்தில் நுழைந்து செடிகளை எல்லாம் நாசமாக்கிவிட்டது. எனக்கு நஷ்டஈடுகொடு!" என்றான்.

"யோவ்! என்னய்யா சொல்ற இது என்ன புதுக் கதை எங்கிட்ட ஏது பசு?" என்று ஒரே நேரத்தில் சண்டை போட்டனர். கணவன், மனைவி இருவரும். "இப்போ புரியுதா இல்லாத பசுக்களை வைத்து சண்டைப் போட்டே இருவரும் இவ்வளவு நாட்கள் பொழைப்பை ஓட்டி விட்டீர்கள். இதனால் லாபம் என்ன? உங்க வீட்டுப் பொருட்கள் போனதுதான் மிச்சம். இனி இந்த கற்பனை கோட்டையை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு உழைக்கிற வழியை பாருங்க!" என்றார். இருவரும்வெட்கத்தில்தலை குனிந்தனர்.

04.2017
18

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1025-போலெஸ்லாவ் குரோப்றி போலந்தின் முதல் மன்னனாக முடி சூடினான்.
- 1797-நியுவியெட் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியர்களை வென்றனர்.
- 1835-அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன் நகரம் அமைக்கப்பட்டது.
- 1880-மிசூரியில் வீசிய புயல் காற்றினால் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- 1906-அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நகரில் 3,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 1909-ஜோன் ஆஃப் ஆர்க் பத்தாம் பயஸ் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டாள்.
- 1912-கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த 705 பேர் நியூயோர்க் வந்து சேர்ந்தனர்.
- 1930-பிபிசி வானொலி தனது வழமையான செய்தி அறிக்கையில் இந்நாளில் "எந்த செய்திகளும் இல்லை" என அறிவித்தது.
- 1941-ஜேர்மனியப் படைகள் ஏதென்சை நெருங்கும் போது கிறீஸ் பிரதமர் அலெக்சாண்ட்ரொஸ் கொரிசிஸ் தற்கொலை செய்து கொண்டார்.
- 1942-இரண்டாம் உலகப் போர்: டோக்கியோ நகர் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன.
- 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹெலிகோலாந்து என்ற சிறு தீவின் மீது ஆயிரத்துக்கும் மேற்பட்ட போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.
- 1949-அயர்லாந்து குடியரசு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1954-கமால் அப்துல் நாசர் எகிப்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1958-இலங்கையில் பண்டாரநாயக்க- செல்வநாயகம் ஒப்பந்தம் முறிவடைந்தது.
- 1980-சிம்பாவே குடியரசு (முன்னாள் றொடீசியா) அமைக்கப்பட்டது. கனான் பனானா அதன் முதல் ஜனாதிபதியானார்.
- 1983-லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 63 பேர் கொல்லப்பட்டனர்.
- 1993-பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இசாக் கான் நாடாளுமன்றம் மற்றும் அமைச்சரவையைக் கலைத்தார்.
- 1996-லெபனானில் ஐ.நா. கட்டடம் ஒன்றின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதில் 106 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1838-பவுல் எமில் புவபோதிரான், பிரெஞ்சு வேதியியலாளர் (இ. 1912)
- 1858-தோண்டோ கேசவ் கார்வே, இந்தியக் கல்வியாளர் (இ. 1962)
- 1858-ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர் (இ. 1917)
- 1884-ஜான் ஆன்வெல்ட், எசுத்தோனிய அரசியல்வாதி (இ. 1937)
- 1941-மைக்கல் டேனியல் ஹிக்கின்ஸ், அயர்லாந்தின் ஆவது அரசுத்தலைவர்
- 1967-மரியா பெல்லோ, அமெரிக்க நடிகை, பாடகி

### இறப்புகள்

- 1859 -தாந்தியா தோபே, இந்திய இராணுவத் தளபதி (பி. 1814)
- 1916-ஜி. சுப்பிரமணிய ஐயர், இந்திய இதழியலாளர் (பி. 1855)
- 1955 -ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், செருமனிய-அமெரிக்க இயற்பியலாளர் (பி. 1879)

### சிறப்பு நாள்

- ஈரான் - இராணுவ நாள்
- சிம்பாவே - விடுதலை நாள் (பி.1980)
- உலக மரபுடைமை நாள் (உலக பாரம்பரிய நாள் (பி. 1922)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 120 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 110 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 150 | 200 | 170 | 200 | 140 |
| தக்காளி | 80 | 160 | 80 | 100 | 100 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 120 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 120 | 120 | 50 | 70 | 80 | 100 | 70 |
| கரட் | 100 | 120 | 80 | 100 | 70 | 200 | 80 |
| பூசணி | 50 | 100 | 40 | 60 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 100 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 120 | 150 | 140 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 200 | 100 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | - | 80 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 100 | 120 | 120 | 150 |
| லீக்ஸ் | 80 | 100 | 190 | 120 | 80 | 160 | 80 |
| பீற்றூட் | 120 | 100 | 40 | 100 | - | 160 | 80 |
| கறிமிளகாய் | 160 | 200 | 140 | 160 | 140 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 280 | 400 | 350 | 400 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 160 | 300 | 140 | 140 | 160 | 320 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 80 | 100 | - | 80 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 20 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய | 60 | 40 | 50 | 80 | 50 | 80 | 70 |
| தேங்காய (ஒன்று) | 70 | 100 | 70 | 70 | 60 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 260 | 300 | 160 | 100 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 200 | - | - | - | - | - | - |
| முள்ளங்கி | 80 | - | - | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | - | 10 | 30 | - | 30 | 20 |
| வல்லாரை | 10 | - | 10 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | - | - | - | - | 50 | 80 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிவிடுவான்.

– காரவான்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நாள்தோறும் நடக்கிற விபத்தை தடுப்பாரும் இல்லை; தட்டிக்கேட்பாரும் இல்லை

காலைப்பொழுதில் பத்திரிகைகளை எடுத்தால் விபத்து மரணம் என்ற செய்திக்குப் பஞ்சமே இல்லை எனலாம்.

ஒவ்வொரு நாளும் விபத்து மரணம் நடந்த வண்ணமுள்ளன.

யுத்த காலத்தில் நடந்த மரணங்கள் போல விபத்து மரணங்கள் இடம்பெறுவதைக் காண முடிகின்றது.

வீதியில் இறங்கியவர் வீடு வந்து சேர்ந்தால் உண்டு என்றளவிலேயே தற்போதைய நிலைமை இருப்பதைக் காண முடியும்.

மனித உயிர்களுக்குப் பெறுமதி இல்லை என்றாயிற்று. அந்தளவுக்கு மரணம் மலிந்து போயுள்ளது.

பெற்று வளர்த்த பிள்ளை தங்களைப் பார்ப்பான் என்றிருக்க, விபத்தில் பிள்ளைகளைப் பறிகொடுத்தால் நிலைமை எப்படியிருக்கும் என்பதை நினைத்தாலே இதயம் கருகிப் போகும். அந்தளவுக்கு விபத்து மரணங்கள் கொடுமையானவை.

அண்மையில் வேலணை – அராலிச் சந்தியில் நடந்த விபத்தொன்றில் புதுமணத் தம்பதிகள் விபத்துக்குள்ளாகினர்.

இதில் மணமகன் சம்பவ இடத்திலேயே இறந்து போனார்.

தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளையான அவரின் இழப்பால் பெற்றோர்கள் தாங்கொணாத் துயர் அடைந்தனர்.

ஒரே பிள்ளையின் மரணம் அவர்களை வாட்ட ஒரு நாள் தந்தையார் தூக்கிட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் செய்தியாக – தகவலாக வெளிவராமல் இருந்திருக்கலாம். ஆனால் விபத்தில் இறந்த மகனின் துயரைத் தாங்க முடியாத வயோதிபத் தந்தை தன்னுயிரை மாய்த்து விடுகிறார் எனும் போது,

நடந்த விபத்து எந்தளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை நாம் உணர முடியும்.

இதுபோலவே ஒவ்வொரு விபத்து மரணங்களும் பெற்றோர்கள், பிள்ளைகள், கணவன், மனைவி எனப் பல தரங்களில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது.

விபத்தில் தாயை இழந்த பிள்ளைகளின் வாழ்வு பற்றி ஒரு கணம் சிந்தித்தால் வாகனம் செலுத்துவோர் தங்களின் தவறுகளை உணர்வர் என்பது நம் தாழ்மையான கருத்து.

விபத்தில் ஏற்படும் மரணம் என்பதற்கு அப்பால், படுகாயமடைந்து என்பு முறிந்து ஆறு மாதம்; ஒரு வருடமென படுக்கையில் இருப்பதும் நிரந்தர அங்கவீனத்துக்கு ஆளாகுவதும் என எல்லாமும் குடும்ப சூழலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

ஆகவே விபத்து மரணங்களைத் தடுப்பது – தட்டிக் கேட்பது என்ற விடயத்தில் சமூக ஒத்துழைப்பு அவசியமாகிறது.

எனினும் இன்றுவரை விபத்து மரணங்கள் பற்றிக் கதைப்பதோடு, அந்நேரத்தில் மட்டும் கவலைப்படுவதோடு சமூகத்தின் பணி நின்று விடுகிறது.

இந்நிலைமை தொடருமாயின் விபத்து மரணங்கள் மிகவேகமாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

வாகனங்களின் அதிகரிப்பு; இளைஞர்களிடம் இருக்கக்கூடிய மோட்டார் சைக்கிள்களின் பெருக்கம் என எல்லாமும் சேர்ந்து சந்திக்குச் சந்தி, வீதிக்கு வீதி விபத்தாக மாறி வருவதால்,

விபத்தை தடுப்பதில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதில் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் தொண்டர் சேவையை ஆரம்பிப்பது ஆரோக்கியமான விடயமாக இருக்கும் என்பதால் இது பற்றிச் சிந்திப்பது நன்மை பயக்கும்.

# பொட்டு அம்மான் உயிருடன் இல்லை

## தேசிய புலனாய்வு பிரிவு 100 வீதம் உறுதி

### கபில ஹெந்தவிதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மான் உயிருடன் இல்லை என்பது 100 வீதம் உறுதி என முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளர் கபில ஹெந்த விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று பொட்டு அம்மான் குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

பொட்டு அம்மான் மட்டுமன்றி போர் முடிவடைந்த தன் பின்னர் பிரபாகரனும் உயிருடன் இருப்பதாக கதை கூறினார்கள்.

போர் முடிய முன்னதாகவே பிரபாகரன் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றார் என சிலர் கூறினார்கள்.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் மக்களிடம் பணம் திரட்டும் நபர்களே இதன் ஊடாக நன்மையடைய முயற்சிக்கின்றனர்.

எமக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நந்திக்கடல் பகுதியில் 450 புலி உறுப்பினர்கள் தாக்குதல் நடத்திய வேளையில் பொட்டு அம்மான் அங்கு கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் தாக்குதல்களின் போது இந்த 450 புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

இந்தக் குழுவில் பொட்டு அம்மானும் அங்கு உள்ளடங்கியிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நாம் பொட்டு அம்மானின் சடலத்தை அடையாளம் காணவில்லை.

மேலும் இராணுவப் பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு அதே தினத்தில் ஓர் நோயாளர் காவு வண்டி வந்ததாகவும் அந்த வண்டி வெடித்துச் சிதறியதாகவும் அதில் ஓர் சடலம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த சடலம் பொட்டு அம்மானினது என்றே கூறப்படுகின்றது.

எவவாறெனினும் பொட்டு அம்மான் இல்லை என்பது நூற்றுக்கு நூறு வீதம் உறுதியானதாகும்.

கடல் வழியாக தப்பிச் செல்லவும் அந்த சந்தர்ப்பத்தில் வாய்ப்பு இருக்கவில்லை.

கடற்படையினர் முல்லைத்தீவு கடற்பரப்பினை சுற்றி வளைத்திருந்தனர்.

அவ்வாறு இல்லையென்றால் பொட்டு அம்மான் இன்னமும் வன்னியில் ஒளிந்திருக்கத்தான் வேண்டும்.

இறுதியில் இவ்வாறான கதைகளின் ஊடாக நன்மை பெற்றுக்கொள்வது புலி ஆதரவாளர்கள் மட்டுமே ஆகும்.

புலி ஆதரவு புலம்பெயர் சமூகமேயாகும். இவ்வாறு கதைகளைக் கூறி மேலும் நிதி திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என கபில ஹெந்தவிதாரண தெரிவித்துள்ளார. (இ-7)




ஸ்ரீபத்மநாப புருஷோத்தம வாஸுதேவ
வைகுண்ட மாதவ ஜனார்த்தன சக்ரபாணே
ஸ்ரீவத்ஸசிஹ்ன சரணாகத பாரிஜாத
ஸ்ரீவேங்கடாசலபதே தவ சுப்ரபாதம்!

இடந்தது பூமி எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச- கிடந்ததுவும்
நீராதமோ கடலே நின்றதுவும் வேங்கடமே
பேராத வண்ணர் பெரிது- **பொய்கை ஆழ்வார்**

பூமாதேவியைக் காக்கும் பொருட்டு வராக அவதாரம் எடுத்து நிலத்தை தோண்டியவனும் ஆநிரைகளையும் அபயமென அவன் முகம் பார்த்த மக்களையும் பெரு மழையிலிருந்து காக்க கோவர்த்தன மலையைக் குடையாய் எடுத்தவனும் அகிலமே அஞ்சிய கம்சன் என்னும் அரக்கனை வதைத்துக் கொன்றவனுமான திருமால் பள்ளி கொண்டிருப்பதென்னவோ பாற்கடலில. ஆனால் அகிலத்து மக்கள் எல்லோரும் எக்காலத்திலும் அந்த அழகனைக் கண்டு ரசித்து அனுபவித்து. அடிபணிந்து வணங்கி அருள்பெற வேண்டுமென்பதற்காக அவன் நின்றதுவோ திருவேங்கட மலையில். (தொடரும்)

## பொட்டு அம்மான் உயிரிழந்தார் என்று நான் கூறவில்லை - கருணா மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மான் உயிரிழந்தார் என்று நான் கூறவில்லை என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொட்டு அம்மானின் சடலம் கிடைக்கவில்லை. எனவே அவர் உயிரிழந்தார் என உறுதிப்படுத்தி என்னால் கூற முடியாது.

ஆனால் பொட்டு அம்மான் உயிரிழந்தார் என இராணுவம் கூறுகின்றது.

2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதியின் பின்னர் இலங்கையில் பொட்டு அம்மான் தொடர்பில் எவ்வித தகவல்களும் கிடையாது.

சடலம் கிடைக்காத காரணத்தினால் எமில்காந்தன், பொட்டு அம்மான் இறந்ததாக கூற முடியாது என கருணா தெரிவித்துள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**கஞ்சி மோசமான உணவா?**

பழைய காலத்தில் கஞ்சி அனைவருக்கும் பிடித்தமான உணவாக இருந்தது. காலையில் கஞ்சியும் துவையலும்தான் உணவு.




அதே சமயம் அன்று கஞ்சியும் கஞ்சித் தண்ணீரும் மிக ருசி யாக இருந்தது.

ஏனெனில் அப்போது இரசாயன உரங்கள் பயன்படுத்தப் படவில்லை.

இரசாயன உரங்கள் பயன்பாட்டிற்கு வந்ததுடன் உணவில் உள்ள பழைய ருசி எங்கோ போய் மறைந்துவிட்டது.

முந்தைய காலத்தில் சிறப்பான உணவுகள் எதுவும் இல்லையென்றாலும் உடல் ஆரோக்கியத்தில் எந்தக் குறையுமில்லாமலிருந்தது. இன்று சிறப்பான உணவுகள் அதிகம் இருந்த போதிலும் ஆரோக்கிய நிலை மிகவும் மோசமாக இருக்கிறது.

(தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ஒருவேளை புகை குடிப்பதற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாவது ஒரு மனிதனுக்குப் பணிசெய்தல் இலட்சக் கணக்கான தியானங்களைவிட மிக மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவருக்கு வரும்.

❖ என்னைத் தொடாதே என்பது உனது கொள் கையாகவும் பொங்கல் பானை உனது தெய்வமாகவும் இருக்கும்வரை ஆன்மீக முன்னேற்றம் உனக்குக் கைகூடாது.

❖ எந்தச் செயலின் பயனும் நன்மை தீமைகளின் கலப்பாகும். தீமை கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சூழும் புகைபோல் சிறிதாவது தீமை எப்போதும் செயலை ஒட்டியிருக்கின்றது. மிகப் பெரு நன்மையையும் மிகக் குறைவான தீமையையும் தரும் செயல்களையே நாம் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ஆம் ஆண்டுக்கான தேசியமட்ட சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சியிலிருந்து 49 மாணவர்கள் தெரிவாகினர்

இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 49 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் கடந்த 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட இளையோர் சதுரங்கப் போட்டிகளில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் நேற்று 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை கொழும்பு டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரியில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் விபரம் வருமாறு.

**8 வயதின் கீழ் ஆண்கள**

1 ஆம் இடம் ச.மதுமிலன், 2 ஆம் இடம் சி.தமிழ்குமரன் (கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்), 3 ஆம் இடம் ரி.பினோஜன் - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**8 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம் பு.நந்துஷா - (கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்), 2 ஆம் இடம் பா.வட்ஷிகா - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் நி.பம்ஷிகா - (சோரன்பற்று சீ.சீ.த.க. பாடசாலை),4 ஆம் இடம் கே. லதுர்ஜிகா- (மாசார் அ.த.க.பாடசாலை),5 ஆம் இடம்- எஸ். ஜாதவி - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**10 வயதின் கீழ் ஆண்கள**

1 ஆம் இடம் ஜே.பிறேம்டிலக்ஷன் , 2 ஆம் இடம் சி.மகிழன்பன்- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் கி.பானு ஜன், 4 ஆம் இடம் எஸ். கிருஷாந் - (கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்).

**10 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம் பு.கலையிசை - (கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயம்),2 ஆம் இடம் ஜே.யாழவி - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் பா.துளசிகா - (கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்), 4 ஆம் இடம் எம். வைகா- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**12 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம் கு.சங்கீர்த்தன் , 2 ஆம் இடம் சி.பிரணவன்,3 ஆம் இடம் ரீ. நவீனன், 4 ஆம் இடம் எம். நித்திலன், 5 ஆம் இடம் எஸ். நிதுஷன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**12 வயதின் கீழ் பெண்கள**

1 ஆம் இடம் ஜே.கபீஷ்ணா - (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் - மோ.வானதி, 3 ஆம் இடம் எம்.மருணிதா, 4 ஆம் இடம் ப.கிசோரிகா, 5 ஆம் இடம் கே.மயூரதா- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 6 ஆம் இடம் கௌ.பிறையினி - (பளை மத்திய கல்லூரி).

**14 வயதின் கீழ் ஆண்கள**

1 ஆம் இடம் பா.கம்சிகன் - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் - ஈ.ஜதுர்ஷன் - (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் - ஆர்.பிரதாபன், 4 ஆம் இடம் வி.தர்ஷிகன் - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்). 5 ஆம் இடம் சே. சிவகுமாரன் - (வட்டக்கச்சி மத்திய கல்லூரி),6 ஆம் இடம் கே.கிசேரன் - (பளை மத்திய கல்லூரி), 7 ஆம் இடம் சி.கவிசாந், 8 ஆம் இடம் எம்.நோஜன்- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**14 வயதின் கீழ் பெண்கள**

1 ஆம் இடம் கௌ. தமிழிசை - (பளை மத்திய கல்லூரி), 2 ஆம் இடம் க.றஜீனா - (இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம் வி.றக்ஷிகா - (புனித திரேசா பெண்கள் கல்லூரி).

**16 வயதின் கீழ் ஆண்கள்**

1 ஆம் இடம் ஜே.பிரவிந்தன்,2 ஆம் இடம் சி.விக்னேஷ், 3 ஆம் இடம் எம். குயிலன், 4 ஆம் இடம் த. இளங்கோபன்- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), 5 ஆம் இடம் உ.ஹரிராம் - (திருவையாறு மகா வித்தியாலயம்).

**16 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம் பி.மதுசனா, 2 ஆம் இடம் - கெ.பிரம்மிகா, 3 ஆம் இடம் எம்.புகழினி- (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

**18 வயதின் கீழ் ஆண்கள**

1 ஆம் இடம் எஸ். டனுஷியன் -(அக்கராயன் மகா வித்தியாலயம்), 2 ஆம் இடம் சே.மயூரன் - (வட்டக்கச்சி மத்திய கல்லூரி).

**18 வயதின் கீழ் பெண்கள**

1 ஆம் இடம் - எஸ். கஜானி - (கிளிநொச்சி இந்துக் கல்லூரி).

**16 வயதின் கீழ் பெண்கள்**

1 ஆம் இடம்- பி.மதுசனா - (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).

இம் மாணவர்கள் பங்கு பற்றவுள்ள தேசிய மட்ட இளையோர் சதுரங்கப்போட்டிகள் சர்வதேச சதுரங்க தரப்படுத்தல் பட்டியலுக்கு ரேட்டிங்கிற்கு உட்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டிகள் கடந்த வருடம் முதல் முறையாக கிளிநொச்சியில் நடைபெற்றதுடன் 53 பேர் தேசிய மட்டப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அதில் ஒருவர் சர்வதேச சதுரங்கத் தரப்படுத்தல் பட்டியலில் இடம் பிடித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## ஐ.நா தீர்மானத்தில்...

தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும் அவ்வாறான நிலைமையே தொடர்கின்றது என குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு மேலும் இரு வருட கால அவகாசம் வழங்குவதற்கு சிவில் அமைப்புக்களும் இணங்கியிருந்தன. இலங்கைக்கு கால அவகாசம் வழங்கி தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில், இலங்கை அரசு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

இது தொடர்பில் சிவில் சமூகத்துடன் ஏதாவது ஆராய்ந்துள்ளதா? என்பது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை அரசு ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இதுவரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அது தொடர்பில் அக்கறை கொள்ளாது இருக்கின்றது.

அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்துவதாக காட்டிக்கொண்டு ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றது.

ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னரும் இவ்வாறுதான் செயற்பட்டது. அதன் பின்னரும் அவ்வாறுதான் இயங்குகின்றது.

இதனாலேயே சிவில் அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## 137 ஆண்டுக்கு...

ங்களில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையிலேயே இந்த அறிக்கையினை அமெரிக்க வானியல் ஆராய்ச்சி மையமான நாசா வெளியிட்டுள்ளது.

அந்த புள்ளி விபரங்களின்படி கடந்த 137 ஆண்டுகளில் வெப்பம் மிகுந்த 2ஆவது மாதமாக 2017 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதிவாகியிருந்த வெப்ப நிலையை விட கடந்த மார்ச் மாதம் 0.15 டிகிரி வெப்பம் குறைவாக காணப்படுவதாக நாசா மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

## மோடி - சம்பந்தன்...

சர்வதேச வெசாக் நிகழ்வுகள் இந்த வருடம் இலங்கையில் கொண்டாடப்படுகின்றது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடிக்கு, இலங்கை அரசு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பை ஏற்று அடுத்த மாதம் 11ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வரவுள்ளார்.

இந்த இலங்கைப் பயணத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனும் நரேந்திர மோடி சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் அவர் தனியான சந்திப்பைநடத்தவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## நாட்டைப் பிரிக்காது...

ஊடகங்களிடம் மேலும் கூறுகையில்,

நாட்டின் முக்கிய பல பிரச்சினைகளுக்குத் தீர்வாகத்தான் இந்த தேசிய அரசு உதயமானது. இந்த அரசு வந்து இரண்டு வருடங்களில் பல முக்கிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

அதற்கு உதாரணமாக வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பிரச்சினைகளைக் கூறலாம். 20 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகள் பல விடுவிக்கப்பட்டுள்ளன.

காணாமல்போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காக அலுவலகத்தை அமைப்பதற்கான சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அரசியல் தீர்வை வழங்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த அரசு ஆட்சியைக் கையேற்றது முதல் அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

அதற்கு ஏற்பவே புதிய அரசமைப்பு கொண்டு வரப்படவுள்ளது. அந்தப் புதிய அரசமைப்பின் ஊடாக வழங்கப்படவுள்ள அரசியல் தீர்வானது ஒருபோதும் நாட்டைப் பிளவுபடுத்தாது.

நாட்டை இரண்டாகப் பிரிக்காமலே அதிகாரப் பகிர்வை நாம் வழங்குவோம்.

தமிழீழத்தை உருவாக்கும் விதத்தில் அரசியல் தீர்வை வழங்கப் போவதாக மகிந்த அணியினர் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை என நளின் எம்.பி தெரிவித்தார். (செ-11)

## மது அருந்தியதால்...

சாலையில் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை ஜீவராஜா (வயது 45) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் அண்மைக்காலமாக நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார். கடந்த 6 வருடங்களுக்கு மேலாக குடிப்பழக்கத்தை கைவிட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதன்முறையாக மது அருந்திவிட்டு உறங்கியுள்ளார்.

மறுநாளான நேற்றைய தினம் காலை அவரது மனைவி அவரை எழுப்பும் போது பேச்சு மூச்சின்றி கிடந்துள்ளார்.

உடனடியாக புங்குடுதீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனாவைத்தியசாலையில்காலை 7.15 மணியளவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நண்பகல் 12.30 மணியளவில் பிரஸ்தாப குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

வைத்திய அறிக்கையின்படி குறித்த நபர் நீரிழிவு நோய் இருக்கும் போது அளவுக்கதிகமாக மது சாரம் அருந்திய காரணத்தால் உடலில் சீனியின் அளவு குறைவடைந்து குறித்த இறப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## சக்திமிக்க இலங்...

ள்ள சக்தி வாய்ந்த நாடாக இலங்கை உள்ளது என வியட்நாம் பிரதமர் நுயென் சுவான் புக் புகழாரம் சூட்டியுள்ளார்.

வியட்நாமுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று காலை சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகங்களின் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஹனோயில் உள்ள வியட்நாம ஜனாதிபதி மாளிகையில் நடந்த சந்திப்பின் பின்னர், கருத்து வெளியிட்ட வியட்நாம் பிரதமர் நுயென் சுவான் புக்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வியட்நாம் பயணத்தின் மூலம், இரண்டு நட்பு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் புதிய அத்தியாயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எல்லா வேளைகளிலும் இலங்கையும் அந்நாட்டு மக்களும் வியட்நாமுடன் கொண்டுள்ள நட்புறவை நாங்கள் மதிக்கிறோம்.

இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள சக்தி வாய்ந்த நாடாக இலங்கை காணப்படுகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில், பெற்றோலிய எண்ணெய் மற்றும் எரிவாயு, உட்கட்டமைப்பு, தகவல் தொழில்நுட்பம், ஆடைகள், விவசாயம் மற்றும் மீன்பிடி, புதுப்பிக்கத்தக்க சக்தி, விமான சேவைகள், கல்வி, சுற்றுலா போன்ற துறைகளில் உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான உடன்பாடில் நாம் கையெழுத்திட்டுள் ளோம் என்றும் வியட்நாம் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

இரண்டு நாடுகளும் மோசமான போர்களை சந்தித்தவை. தற்போது, அபிவிருத்திப் பாதையில் செல்கின்றன. நடுத்தர வருமானமுள்ள நாடுகளாக முன்னேறியுள்ளன.

வியட்நாமிடம் பாடங்களைக் கற்றுக் கொண்டு இலங்கையை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் எண்ணமாகும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில், வியட்நாம் பிரதமரை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நயினாதீவில்...

விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

முன்னதாக நாகவிகாரையின் விகாராதிபதியை தரிசித்ததுடன் அவரிடம் துறவிகளுக்கான காணிக்கையை செலுத்தியதுடன் ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய குருக்களை தரிசித்து காணிக்கை செலுத்தி சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அத்துடன் நாக விகாரையிலுள்ள அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

ஜனாதிபதியின் இந்த விஜயத்தில் ருவன் வெலிமகாசாய விகாராதிபதி வண. பல்லே கம ஹேமரதன நாயக்க தேரரும் கலந்து கொண்டிருந்தார்.

இது ஜனாதிபதியின் தனிப்பட்ட விஜயமாக அமைந்ததன் காரணமாக சமய வழிபாடுகளை நிறைவு செய்ததுடன் வேறு எந்த நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## பலியானோருக்கு...

டுள்ளதாக நிதியமைச்சு நேற்றையதினம வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்த விபத்தில் சொத்துக்களை இழந்தவர்களுக்கு அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாய் வரை நட்டஈடாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மீதொட்டமுல்ல குப்பை மேடு கடந்த 14ஆம் திகதி மாலை குடியிருப்புகள் [illegible] சரிந்து இடம்பெற்ற அனர்த்தத்தில் இதுவரை 30 பேர் பலியாகியிருப்பதோடு, 28 பேர வரை காணாமல் போயுள்ளனர்.

980 பேர் வரை இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 79 வீடுகள் முற்றாகவும், 17 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இந்த அனர்த்தம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வார இறுதியில் விசேட பேச்சு இடம்பெற்றதோடு அதில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நட்டஈடு வழங்குவது குறித்து எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நிதியமைச்சு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதேவேளை மீதொட்டமுல்ல அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக திரைசேறியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த அனர்த்தத்தில் வீடுகளை இழந்தவர்களுக்கு அவர்களது விருப்பத்திற்கு அமைய கொழும்பு நகரில் மாடி குடியிருப்புத் தொகுதி திட்டத்தில் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் யோசனையை மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் போது முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## யாழ்.பல்கலைக்...

நாகரிகத்துறை சமூகத்தை நோக்கிப் பயணிக்கின்றது என்பதனை இம்மாநாடு மேலும தெளிவுபடுத்தும் என்பது எம் எல்லோரதும் நம்பிக்கையாகும். இம்மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பவர்கள் மட்டுமன்றி சைவ அன்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதன் மூலம் எமது எண்ணம் நிறைவேறும் என நம்புகின்றோம். இச் சைவ மாநாட்டில் பேராளர்களாக பதிவுசெய்ய விரும்புவோர் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதனைத் தெரிவிப்பதுடன், சைவ சமய ஆர்வலர்கள் பதிவுகள் எவையும் இன்றி மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்பிக்கலாம் என்பதனையும் கனிவுடன் அறியத் தருகின்றோம்.

இம்மாநாட்டின் வெற்றிக்கு உள்நாட்டில் இருந்து மட்டுமன்றி மேற்குலக நாடுகளில் வாழும் அன்பர்கள், நிறுவனங்கள் பலரும் அனுசரணையாக உதவியுள்ளமையை நன்றியுணர்வுடன் நினைந்து மகிழ்கின்றோம்.

சைவ மாநாட்டின் தொடக்கநாள் நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், ஆதாரசுருதி உரையை தமிழ்நாட்டைச் சேர்ந்த சைவசித்தாந்தம் மற்றும் சைவாகமப் பேராசிரியர் முனைவர். எஸ்.பி.சபாரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ஆ.நடராஜன், முதல்நாள் தொடக்கவுரையை இந்துநாகரிகத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் நிகழ்த்துவர். இம்மாநாட்டில் தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய சைவசித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வீ.ஜெயபால் கலந்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

இம்மாநாட்டின் நிறைவுநாள் நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கில் தகைசார் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கௌரவ விருந்தினராக தமிழ்நாட்டைச் சேர்ந்த சைவசித்தாந்தம் மற்றும் சைவாகமப் பேராசிரியர் முனைவர். எஸ்.பி. சபாரத்தினம், தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய சைவசித்தாந்தப் பேராசிரியர் முனைவர் வீ. ஜெயபால், ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டிற்கான ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ தேசிக சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியார், சின்மயா மிசன் யாழ் வதிவிட முதல்வர் சுவாமி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் , இணுவில் தர்மசாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் ., வாழ்த்துச் செய்திகளை சிவாசாரியர்களும், குரு முதல்வர்களும் சமயப் பெரியவர்கள் என்போரும் வழங்கவுள்ளனர். மாநாட்டின் நிறைவு நாளில் சிறப்புரையாற்றுவதற்கு சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் இளைய்பட்டம், பேரூர் ஆதீனம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சைவசித்தாந்தத்தை இலங்கையில் தற்போது பரப்புரை செய்துவரும் சைவச்சான்றோர்களும் இம்மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். இம்மாநாட்டின் தொடக்க மங்கல நிகழ்வாக யாழ்.பல்கலைக்கழக ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று சமய தீட்சை வழங்கும் நிகழ்வும், குருமார்கள் உடனான கிரியைகளும் சைவ வாழ்வியலும் என்பது பற்றிய கலந்துரையாடல்களும் நடைபெற்றன. சித்தாந்த சைவம் சம்பந்தமாக இலங்கையர் வெளியிட்ட நூல்கள் அடங்கிய கண்காட்சி ஒன்றும் இம்மாநாட்டு நாட்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்பதையும் அகமகிழ்வுடன் குறிப்பிடுகின்றோம்.

இச்சைவமாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு யாழ்.பல்கலைக்கழகம், உள்நாட்டு வெளிநாட்டு சமய நிறுவனங்கள் பெரிதும் உதவியுள்ளனர். இம்மாநாட்டின் ஆய்வடங்கலை வெளியிட அனுசரணை வழங்கிய கொழும்பு அகில இலங்கை இந்து மாமன்றத்தையும், கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தையும் இங்கு குறிப்பிடுகின்றோம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ இம்மாநாடு வழிகாட்டும் என்று நம்புகின்றோம் என பேராசிரியர் மா.வேதநாதன் தெரிவித்தார். இந்த ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

## அம்பாந்தோட்டையில்...

ஊடகங்களில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதியாகவும், கடலோரக் காவல் படையின் பணிப்பாளராகவும் பணியாற்றிய வைஸ் அட்மிரல் அருண்குமார் சிங் தனது கட்டுரையில் இலங்கையில் சீனத் தலையீடு தொடர்பாக குறிப்பிடுகையில்,

சீனாவின் காசோலைப் புத்தக இராஜ தந்திரத்தில் இருந்து மோசமான பாடத்தைக் கற்ற முதலாவது நாடு இலங்கையாகும்.

முன்னைய சீன சார்பு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில், புதிய தொடருந்து பாதையை அமைக்கவும், கொழும்புதுறை முகத்தில் புதிய கொள்கலன் இறங்குதுறை ஒன்றை அமைக்கவும், காலியையும் கொழும்பையும் இணைக்கும் நெடுஞ்சாலைகளை அமைக்கவும், அம்பாந்தோட்டை அருகே புதிதாக மத்தல ராஜபக்ஷ அனைத்துலக விமான நிலையத்தை அமைக்கவும் சீனாவுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இன்று அம்பாந்தோட்டை துறைமுகமும், அதற்கு அருகேயுள்ள விமான நிலையமும், பயன்படுத்தப்படாமல் [illegible] டன், இலங்கைக்கு [illegible] யாகவும் மாறி விட்டன.

## ஜனாதிபதி சொன்னால்...



கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே இரா.சம்பந்தன் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த 30 ஆண்டுகளாக தமது சொந்த காணிகளில் குடியேற முடியாது தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதன்படி, இன்றைய தினம் (நேற்று) பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேய வர்த்தன, அமைச்சின் செயலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் இராணுவத் தளபதி, ஏனைய படைகளின் தளபதிகள் மற்றும் த.தே. கூட்டமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இராணுவத்தளங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம். அதற்கான ஆயுதங்கள் அவர்களிடம் இருந்தது என தெரிவித்து அதி பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டன.

தற்போது யுத்தம் முடிந்துவிட்டது. விடுதலைப் புலிகளும் இல்லை, ஆயுதங்களும் இல்லை. ஆனாலும் யுத்தம் முடிந்த பின்னரும் பொது மக்களின் காணிகளை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

எனினும், அந்த மக்களின் காணிகள் உரியவர்களிடம் கொடுக்கப்படவேண்டும் என்பதை இச் சந்திப்பின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமும், இராணுவ தளபதியிடமும் வலியுறுத்தியிருந்தோம் என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து பேசிய இராணுவத் தளபதி, படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை தொடர்ந்தும் வைத்திருக்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லை, அத்துடன், பலாத்காரமாக நாங்கள் எந்த காணிகளையும் வைத்திருக்கவில்லை.

இது குறித்து முடிவெடுக்க வேண்டியது சிவில் அதிகாரமே. ஜனாதிபதி காணிகளை விடுவிக்க சொன்னால் நாங்கள் காணிகளை விடுவிக்க தயாராக இருக்கின்றோம். அதனை மீறி எங்களால் செயற்பட முடியாது என இராணுவத்தளபதி குறிப்பிட்டதாக இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும், வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டங்கள் குறித்தும் நேற்றைய சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது. இதனபடி, கேப்பாப்பிலவில் ஒருதொகுதி காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இந்த விடயம் தொடர்பில் அங்கு உள்ள இராணுவ அதிகாரிகளுக்கும், த.தே.கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சிவமோகன் மற்றும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நாளை 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பின் போது அரசாங்க அதிபர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயப்படும். இதனையடுத்து கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும், வலிகாமத்தை பொறுத்தவரை 4 ஆயிரத்து 500 ஏக்கர் காணி படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. காணிகளின் கணிசமான அளவு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாளை மறுதினம் 20ஆம் திகதி மாவை சேனாதிராசா, சுமந்திரன் உள்ளிட்டவர்கள் அங்கு சென்று நிலைமைகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பார்கள் என இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

சீனா சுமார் 9 பில்லியன் டொலரை முதலீடு செய்தது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்காக 1.1 பில்லியன் டொலர் கடனை திருப்பிச் செலுத்த முடியாதிருப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கடன் நிவாரணம் தொடர்பான சர்ச்சைக்குரிய உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளது. இதன்படி, சீன நிறுவனம் ஒன்று அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 60 தொடக்கம் 80 வீதம் வரையான முகாமைத்துவத்தை, 99 அல்லது 50 ஆண்டுகள் வரையில் கட்டுப்படுத்தும் குத்தகையைப் பெற்றுக் கொள்ளவுள்ளது.

இந்த உடன்பாடு சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டால், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் கடற்படைத்தளமும், அதற்கு அருகில் உள்ள விமான நிலையத்தில் சீனாவின் விமானப் படைத்தளமும் அமைக்கப்படுவது உண்மையாகிவிடக் கூடும் என்று குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## புலிகளுடனான...

மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதுடில்லியைத் தளமாகக் கொண்ட ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான போரில், இலங்கை அரசாங்கம் ஆயுதங்கள், பயிற்சி மற்றும் விமானங்களை சீனா, பாகிஸ்தானிடம் இருந்து பெற்றது. அந்த நேரத்தில் இந்தியாவிடம் நீங்கள் உதவி கோரினீர்களா? அவ்வாறு கோரியிருந்தால் அதற்கு புதுடில்லி எவ்வாறு பதிலளித்தது? என்று மகிந்த ராஜபக்ஷவிடம் அவ் ஊடகம் கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்கு மகிந்த ராஜபக்ஷ, இந்திய மத்திய அரசு எமக்கு போர் நடவடிக்கைக்காக பல வழிகளில் உதவியது. எனினும் நாங்கள் கேட்கவில்லை. ஏனென்றால், நான் உங்களுடைய (இந்தியா) போருக்காகவே சண்டையிட்டேன். உண்மையில் இது இந்தியாவினுடைய போர், என்னுடைய போர் அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகள் உங்களின் பிரதமர் ராஜீவ் காந்தியையும், பல பொதுமக்களையும், இந்தியாவில், உங்களுடைய மண்ணிலேயே கொலை செய்தனர். அந்த வகையில் இது என்னுடைய போர் மாத்திரம் அல்ல. அது இந்தியாவினுடைய போரும் தான்.

இது மனிதாபிமானப் போராக இருந்தது. இந்தியா சாத்தியமான எல்லா வழிகளிலும் எமக்கு உதவியது. ஊடகங்களிடம் அதிகமாக கூறி, நாங்கள் அதனை பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

இந்தியா மாத்திரமல்ல, சீனா பிரித்தானியா, அமெரிக்காவும் கூட போரின் போது எமக்கு உதவின என்று மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## வைகோ...

ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசியமைக்காக, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ மீது வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் வைகோ, 15 நாட்களுக்கு முன் அவர் கைது செய்யப்பட்டார்.

அவ்ருக்கு விதிக்கப்பட்ட 15 நாள் நீதிமன்ற காவல் நேற்றுடன் நிறைவடைந்ததை அடுத்து, சென்னை எழும்பூர் நீதிமன்றத்தில் வைகோ முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் ஏப்ரல் 27 வரை மேலும் 10 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு விலைக்கழிவுகள்

பனர் பிரதியாக்கம் - ரூபா 30.00
**(No:1 Quality)**
கதவுகளுக்கான கொத்துவேலை- 10,000/=
**(Door Engraving)**

## மூர்த்தி டிஜிற்றல்

62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**தொ.பே: 077 224 7428**
(அ-8130)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



**UK-550/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
- பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

(அ-8123)

## விற்பனைக்கு

கிளிநொச்சி முரசுமோட்டை கோரக்கன் கட்டு கிராமத்தில் வீடு, வருமானம் தரும் பயிர்களுடன் கூடிய இரு காணிகள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு : 077 071 1141**
(அ-8127)

## குப்...

ள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக இதுவரை 15 பெண்களும் 15 ஆண்களும் உயிரிழந்துள்ளதுடன், இவற்றில் 6 பேர் சிறுவர்கள் என இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த அனர்தத்தால் உயிரிழந்த எட்டுப் பேரின் இறுதிக்கிரியைகள் நேற்று கொலன்னாவ பொது மயானத்தில் இடம்பெற்றது.

இதேவேளை அங்கு மேலும் பலர் சிக்குண்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே...)

(செ-11)

## பணியாளர் வேண்டுகை

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வசிக்கும் பின்வரும் பதவிகளுக்கான அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அப்பதவிக்கான சம்பளம் மற்றும் தொழில் விபரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

1. அச்சியந்திரம் இயக்குநர் (ஓப்செற்)
2. ரைப் செற்றிங் (Coreldraw- Photoshop)
3. புத்தகம் கட்டுநர்
4. போட்டோ கொப்பி இயந்திரம் இயக்குநர்

பழக விரும்புபவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 19,20 ஆகிய திகதிகளில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு: 077 791 7680**
(8754)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - கண்டி வீதி, பரந்தன், பரந்தன் முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து 300 யார் தூரத்திற்குள் கடைக்கட்டிடங்களுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் விரும்பும் பட்சத்தில் வங்கிக் கடன் வசதி ஒழுங்கு செய்து கொடுக்க முடியும்.
(வங்கி கடன் வசதி ஒழுங்கு செய்யும் போது வங்கியின் நடைமுறை சட்டங்களுக்குட்பட்டிருக்கும்)

**தொடர்புக்கு : மூர்த்தி**
**077 527 2093, 071 932 6243**
(அ-8129)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் செல்வராசா புவனேஸ்வரி**
(சின்னக்கிளி)

பிறப்பு : 26.06.1947 - இறப்பு : 29.04.2016
*திதி : சப்தமி*

அன்பால் எம்மை அரவணைத்து
இன்பமான வாழ்வை எமக்களித்து
எம் இதயங்களில் நிலைத்து
நிற்கும் அன்னையே!

வாழ்வின் விடிவெள்ளி நீ
வருடத்தில் முதல் திங்கள் நீ
ஓராண்டு விரைந்து மறைந்து
விட்டதே - அந்த
கருணை ததும்பும் சிரிப்பைக்காணாது
தவிக்கின்றோம்

அன்னையே! அன்பின் மறு உருவே!
ஆண்டுகள் விரைந்து மறையும்
உம் நினைவுகள் எமை விட்டகலா!

முள்ளி வீதி, அரியாலை.
- குடும்பத்தினர்

(8749)

# 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கந்தையா சிவப்பிரகாசம்** (சிவம் ஐயா)
(அம்பாள் குறோசரீஸ், பண்டத்தரிப்பு)

**திதி - 18.04.2017**

ஆண்டொன்று சென்றதுவே ஐயா!
உங்கள் நினைவு மட்டும் நெஞ்சைவிட்டு
அகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.



மலர்வு : 27.04.1940
உதிர்வு : 29.04.2016

**இன்று 18.04.2017 மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பூஜைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**தகவல் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(8725)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org